# ஒரு வருடத்தில் 67,000 தொன் உப உணவு பொருள் யாழ்.

Riegstered as a News pape in Ceylon விலைசதம் 15

ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

மலர் 13
இதழ்: 75
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சித்திரை 15 ஸபர் 9 ஞாயிற்றுக்கிழமை 27-4-69

ஈழநாடு
சந்தா
தினப் பதிபபு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

ஈழநாடு
சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# மாவட்டத்தில் உற்பத்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு
''கடந்த ஓராண்டுகாலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மொத்தம் 67,000 தொன் உபஉணவுப்பொருள்கள் உற்பததிசெய்யப்பட்டிருக்கின்றன. அதேவேளையில் சுமார் 1000 நடுத்தர வகுப்பினருக்கு உபஉணவுற்பத்திக்காக காணயும் வழங்கப்பட்டது''.

இந்தத் தகவலை யாழ் மாவட்ட மேலதிகஅரசாங்க அதிபரான திரு. ஜே. எம். சபாரத்தினம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவினுல் ஒழுங்குசெய்யப்பட்டு திருநெல்வேலி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கமண்டபத்தில் மூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கு—கலந்துரையாடல் நிகழ்ச்சியிலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

திரு. ஜே. எம். சபாரத்தினம் மேலும் பேசியதாவது:

அரசாங்கத்தின் திட்டப்படி உணவுற்பத்தியை விருத்திசெய்யவென காலத்துக்குக்காலம் நாம் காணிக்கச்சேரி நடாத்தி விவசாயிகளுக்குக் காணி வழங்கி வருகின்ருேம். இதனுல் நாம் குறிப்பிட்ட இலக்கை நெல் உற்பத்தியிலும், உபஉணவு உற்பத்திலும் அடைவதற்கு நெருங்கி விட்டதாம்.

குறிப்பிட்ட இக்காலத்தில் பெண்களுக்கான வீட்டுத்தோட்டச் செய்கை கூடிய அளவில் விருத்தி செய்யப்பட்டுள்ளது. உப உணவுற்பத்தியில் நாம் அடைந்துள்ளதுரிதவளர்ச்சியில் உருளைக்கிழங்கு உற்பத்தி முதலிடம்வகிக்கின்றது.

இதனுல் பல நூற்றுக் கணக்கான தரிசுநிலங்கள் இன்று விவசாயநிலங்களாக மாறியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

விழாவை யாழ்ப்பாணக் காரியாதிகாரி திரு. எச். ஈ. புள்ளைநாயகம் ஆரம்பித்து வைத்தார். கூட்டுறவு, சுகாதாரம், சமாதானம், சிரமதானம், விவசாயம், கைத்தொழில் ஆகிய பல்வேறு விஷயங்கள் பற்றியும் கருத்துப் பரிமாறல்கள் நடைபெற்றன.

இன, மத சார்பற்ற ஒற்றுமை பற்றியும், சமாதான வாழ்க்கை பற்றியும், அமெரிக்க சமாதானப் படைத்தொண்டரான திரு. டெனிஸ் கட்ஸ்மன் இங்கு சிறப்புச் சொற்பொழிவாற்றிஞர். யாழ்ப்பாணக் காரியாதிகாரி பிரிவுக் கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. ஏ. வி. ராஜகுலசிங்கம் இந் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருந்தார்.

பின்வரும் நான்கு தீர்மானங்களும் இக்கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்டன.

சங்கங்கள் திறம்பட இயங்குவதற்கு அவ்வச் சங்கங்களின் நிர்வாகமும், மேற்பார்வையாளரும் ஒருமித்து உழைக்கவேண்டும்.

மாதர்களுக்கென விளையாட்டு மைதானங்கள் ஸ்தாபிக்கவேண்டும்.

யாழ். மாவட்டத்திலுள்ள காரியாதிகாரி பிரிவுகளின் மாதர் சங்கங்களுக்கு ஒரு சமாஜம் ஸ்தாபிக்கவேண்டும்.

உப-உணவுப் பொருட்களுக்கு, உதாரணமாக நிலக்கடலை, எள் முதலியவற்றுக்குக் கடனுதவி கொடுக்கப்படவேண்டிய வசதிகள் ஏற்படுத்தவேண்டும். (கா.நி.)

# யாழ். மாவட்ட பஸ் சேவை சீர்கேடு; பஸ்கள் பல பழுது

## ஒவ்வொரு டிப்போவிலும் பஸ்கள் தூங்குகின்றன

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து இ. போ. ச. பஸ் டிப்போக்களிலிருந்தும். தினசரி சேவைக்கு விடவேண்டிய 213 பஸ்களில் 137பஸ்களே இப்போது சேவைக்கு விட தகுதியுடையனவாக விருக்கின்றன. சுமார் 51 க்கும் மேற்பட்ட பஸ்கள் பிரதானமான பழுது காரணமாக சேவைக்கு விடமுடியாமல் டிப்போக்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள் ளன. இதனுல் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும்இ. போ. ச. சேவை பலமாக பாதிக்கப் பட்டுள்ளதாம்.

கோண்டாவில், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, காரைநகர் ஆகிய 5 டிப்போக்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு பஸ் டிப்போக்களிலேயே ஒரு பஸ் கூட பழுதாகாமல் தினசரி சேவையில் நிற்பதாக அறிய வந்துள்ளது.

காரைநகர் டிப்போவில் மொத்தம் 45 பஸ்கள் இருக்கின்றன. இவற்றில் 12க்கும் மேற்பட்டவை பழுதடைந்த நிலையிலுள்ளன. தினசரி 38 பஸ்கள் சேவைக்கு விடப்படவேண்டியிருக்கின்ற[illegible] பஸ்க[illegible]சேவைக்கு விடப் படுகின்றனவாம்.

கிளிநொச்சியில் 10 பஸ்களும், முல்லைத்தீவில் 10பஸ்களும் சேவையிலீடுபட்டிருக்கின்றன. (கா. நி.)

## எதிர்ப்பு

கோட்டை, வெள்ளி
[illegible] ள்ளூர் சினிமாத் தொழிலை அபிவிருத்தி செய்[illegible]

## பலாலி விமானநிலையம் சர்வதேச நிலையம் ஆகும்

### போக்குவரத்து அமைச்சர் உறுதி

அளவெட்டி, வெள்ளி
பலாலி விமான நிலையத்தைச் சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இன்று பலாலி விமான நிலையத்தில் போக்குவரத்து அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருள்ளே தெரிவித்தார்.

இன்று பிற்பகல் விமான நிலையம் வந்தடைத்த அமைச்சரை விமான நிலைய அதிகாரி திரு. எஸ். நடராசாவும் தென்மராட்சி காரியாதிகாரி திரு. பட்றிக்கும் மாலை சூடி வரவேற்றனர்.

மேளவாத்திய இசைகளுடன் தெல்லிப்பழைக்கு அழைத்து வரப்பட்ட அமைச்சர் மாணவ, மாணவிகளின் மரியாதை அணிவகுப்பையும் ஏற்றுக்கொண்டார் சாவகச்சேரி எம். பி. திரு. நவரத்தினமும். உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கமும், அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ்சும் வரவேற்பில் கலந்துகொண்டனர்.

பலாலி விமான நிலையத்தில் நடைபெற்ல தேனீர் விருந்தொன்றில் பேசிய அமைச்சர் பலாலி விமான நிலையத்தை சர்வதேச நிலையமாக்குவதாக உறுதி அளித்தார்.

## அரசாங்கத்துடன் சேர்ந்து

## 'கங்கையைத்திருப்பும்வேலை இவ்வருடம் தொடங்கும்'

### சாவகச்சேரியில்அமைச்சர்ஹுருள்ளே

சாவகச்சேரி, சனி
'எனது வடபகுதி விஜயத்தின் போது என்னிடம் தரப்பட்ட கோரிக்கைகள் யாவற்றிற்கும் சம்பந்தப்பட்ட இலாகாவுடன் யோசனை செய்து ஆவன செய்வேன்' என வடபகுதிக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்த போக்குவரத்து அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருளே நேற்று மாலை சாவகச்சேரியில் கூறினுர்.

பளையிலிருந்து விசேஷ ரயில் வண்டி மூலம் சாவகச்சேரியை வந்தடைந்த அமைச்சரை சாவகச்சேரிப் புகையிரத நிலைய அதிபர் திரு. ஏ. மகாதேவா மாலையிட்டு வரவேற்ருர். பளையிலிருந்து வந்த மந்திரியுடன் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும், மற்றும் உத்தியோகத்தர்களும் வந்திருந்தனர். சாவச்சேரிப் புகையிரத நிலையத்தில் வைத்து உபசபா[illegible] தேசிய கீதம்பாடினர்.

சாவகச்சேரி பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. க. இராமச்சந்திரன் பிரயாணிகள் சார்பாக ஐந்து கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துப் பேசினுர். அம்மகஜரில் கொழும்பு - காங்கேசன் துறை ரயில் வண்டிகளின் வசதியீனம் பற்றியும் இச் சேவைகள் சீர்படுத்தப்பட வேண்டுமெனவும், யாழ்ப்பாணத்திற்கும் பளைக்கும் இடையே மேலும் ஒரு ரயில் சேவை வேண்டுமெனவும், சாவகச்சேரிப் புகையிரத நிலையம் விஸ் தரிக்கப்பட வேண்டுமெனவும், சாவகச்சேரி-சங்கானை பஸ் சேவை சீர்படுத்தப்படவேண்டும் எனவும் கோரப்பட்டிருந்தது.

### மீசாலையில்

மீசாலையில்உள்ள புகையிரதநிலையத்தை வேருேர் இடத்தில் அமைக்கவேண்டு[illegible]

பேசுகையில் மகாவலிகங்கையை வடக்கே திருப்புவதற்கான பணம் இவ்வருடத்தில் ஒதுக்கப்படுமெனவும், அணைக்கட்டு வேலைகளும் இவ்வருடம் ஆரம்பமாகுமெனவும், வேலைகள் பூர்த்தியாக பன்னிரண்டு வருடங்கள் செல்லும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் நேற்று மாலை தச்சன்தோப்பு புகையிரத நிலையத்திற்கு வந்தபோது நாவற்குழி கிராம சபைத் தலைவர் திரு. கே. சடாட்சரம் புகையிரத நிலைய அதிகாரி திரு. எஸ். பொன்னம்பலம் ஆகியோர் அமைச்சருக்கு மாலையிட்டு வரவேற்றனர்.

சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்த தச்சன்தோப்பு புகையிரத நிலையத்தை அமைச்சரும், சாவகச்சேரி எம். பி, திரு. வி. என். நவரத்தினமும் மற்றும் உத்தியோகத்தர்களும் பார்வையிட்டனர்'

தச்சன்தோப்பு புகையிரத நிலையம் அதிக பிரயாணிகள் பிரயாணம்செய்யும் நிலையம் எனவும் இதைவிஸ்தரிக்க வேண்டுமெனவும் அமைச்சரிடம் கோரப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை சூடி வரவேற்றனர். மேளவாத்திய இசைகளுடன் தெல்லிப்பழைக்கு ... நிலையமாக்குவதாக உறுதி அளித்தார்.

# அரசாங்கத்துடன் சேர்ந்து நாகநாதன் வாக்களித்தார்

கொழும்பு, வெள்ளி தமிழரசுக் கட்சியைச்சேர்ந்த நல்லூர் எம். பி. திரு. நாகநாதன் இன்று அரசாங்கத்திற்கு ஆதரவாக ஆட்சி மன்றத்தில் வாக்களித்தார். மின்சார இலாகா மசோதா கமிட்டிமுறையில் ஆராயப்பட்டபோதே திரு. நாகநாதன் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாககளித்தார். எதிர்க்கட்சியினருககு எதிராக வாககளிககவேண்டிய ஒருசந்தர்ப்பம் ஏற்பட்டதிலேயே இவ்விதம் நடந்துகொண்டதாகத் தெரிகிறது. அண்மையில் நடைபெற்ற தமிழரசு மகாநாட்டில் அரசாங்கத்திற்கு எதிராக வாககளிப்பதெனத் தீர்மானிககப்பட்டபின்னர் முதல்தடவையாக இப்படி வாககளிப்பு நடைபெற்றுள்ளது.

# சத்திரசிகிச்சை நிபுணர் கத்தியால் குத்தி படுகொலை

கொழும்பு, வெள்ளி இளம் வயதில் சத்திர சிகிச்சை நிபுணராக பட்டம் பெற்ற டாக்டர் ஒருவர் தமக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரம் ஒன்றில் கலந்துகொண்டு விட்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் இன்று கொழும்பு விக்ரோறியா பூங்காவுககு அருகே நடந்தது.

டி. பந்தல பெரேரா என்ற 23 வயதுடைய இந்த டாகடர் அண்மையில் சத்திர சிகிச்சை நிபுணராக தேர்வில் தேறியிருந்தார். தமது காதலியுடன் காரில் சென்று கொண்டிருககும் போது இனம் தெரியாத இருவரால் இவர் கொலை செய்யப்பட்டார். காதலியின் சங்கிலியும், மணிககூட்டையும் கொலை செய்தவர்கள் களவாடினராம். இது சம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை கொலையுண்ட டாகடர் முன்னாள் கொழும்பு பொலிஸ் சுப்பிரின்டன் திரு. பி. டபிள்யூ பெரேராவின் புதல்வராவர்.

# அமெரிக்காவில்தமிழ்டாக்டர் கௌரவிக்கப்பட்டார்

கொழும்பு,வெள்ளி இருதய சிகிச்சையாளர் அமெரிக்க கல்லூரியொன்றில் இலங்கையைச் சேர்ந்த தமிழ்டாகடர்ஒருவர்கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு இருதய ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரியான டாக்டர் ஜி. சபாபதியே அமெரிககாவில்கௌரவப்பட்டம் பெற்றவராவார்.

கடந்த ஏப்ரல் மாதம் அமெரிககா, இங்கிலாந்து, ஜப்பான், இந்தியாபோன்ற நாடுகளுககு அரசாங்க நிதியுதவியுடன் சென்று திரும்பிய இவர் 1951ல் டில்லியில் காசநோயாளர் டிப்ளோமா பட்டமும், 1961ல் கொழும்புத்திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியாவில் பொது சுகாதாரப்பட்டமும் பெற்றார்.

இவ்வாறுக கௌரவப்பட்டம்பெற்ற இலங்கையருள் இவர் இரண்டாவது ஆளாகும்' டாகடர் கே.ஜி. வில்சன் முதல் இப்பட்டம் பெற்றவர்.

5 டிப்போக்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு பஸ் டிப்போக்களிலேயே ஒரு பஸ் கூட பழுதாகாமல் தினசரி சேவையில் நிற்பதாக அறிய வந்துள்ளது.

கோண்டாவில் டிப்போவில் மொத்தம் 135 பஸ்கள் இருக்கின்றன. இவற்றில் 32 பஸ்கள் பழுதடைந்து சேவைக்கு விடமுடியாமலிருக்கின்றன. தினசரி சேவைக்கு 106 பஸ்கள் விடவேண்டியபோதும் 88 பஸ்களே இப்போது சேவைக்கு விடப்படுகின்றன.

பருத்தித்துறை டிப்போ தடைந்த நிலையிலுள்ளன. தினசரி 38 பஸ்கள் சேவைக்கு விடப்படவேண்டியிருக்கின்றபோதும், சுமார் 25 பஸ்களே சேவைக்கு விடப்படுகின்றனவாம்.

காரைநகர் டிப்போவில் 23 பஸ்கள் இருக்கின்றன. இவற்றில் நான்கு பழுதடைந்துவிட்டன. 19 மட்டுமே சேவைக்குவிடப்படுகின்றன.

பழுதடைந்து இருக்கும் 61 பஸ்களும் மிகப்பெரிய பழுதுடையனவாக இருப்பதால் அவை உடனடியாகச் சேவைக்குவிட முடியாதிருப்பதாகவும், 213 பஸ்கள் சேவைசெய்யவேண்டிய வீதிகளுக்கு 137 பஸ்களுடன் சரிசெய்ய முடியாதிருப்பதாகவும் இ. போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பயணமானர்

பண்டத்தரிப்பு, வெள்ளி வத்திக்கானில் நடைபெறவிருக்கும் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக கருதினல் ஆண்டகை வண. தோமஸ் கூருரே ரோமாபுரி பயணமானர்.

## கொழும்பில் தமிழாராய்ச்சி மாநாட்டு தலைவர்

கொழும்பு. வெள்ளி உலக தமிழாராய்ச்சி மாநாட்டுத்தலைவரானபிரெஞ்சுநாட்டு பேராசிரியர் டாகடர் பிலியோசா வருகிறஆண்டு பாரிஸித நடைபெறவிருககும் தமிழாராய்ச்சி மகாநாடு சம்பந்தமாக இலங்கைப்பிரதிநிதிகளுடன் பேசுவதற்காக நேற்று கொழும்புவந்தடைந்தார்.

இவர் வருகிற 27-ந் திகதி சரஸ்வதிமண்டபத்திதநடைபெறவிருககும் கூட்டமொன்றில் இலங்கை இந்தியதூர கிழககு நாடுகளுககிடையிலான 'கலாச்சார மொழித் தொடர்பு' என்னும் தலைப்பில் உரைநிகழ்த்தவிருககிறார். இலங்கையில தங்கிநிற்கும் காலத்தில 1970.ல நடைபெறவிருககும் மாநாடு சம்பந்தமாக இலங்கை பிரமுகர்களுடன் பேசுவார்.

மேதினம்

# கூட்டணிக் கூட்டத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு

கொழும்பு. வெள்ளி கூட்டணிககட்சியினர் தமிழருடன் நீதியாக நடந்துகொள்ளவேண்டுமென்று கோரும் பிரேரணையொன்று கூட்டணிககட்சியினரின்வருகிற மேதினக கூட்டத்தில் சமர்ப்பிககப்படவிருப்பதாகத் தெரிவிககப்பட்டது.

மேதினககூட்டத்திதநடைபெறும் பேச்சககளை தமிழில் மொழிபெயர்கக ஒருவரை நியமிககவேண்டும் என்ற பிரேரணையும் ஸ்ரீலங்காசுதந்திரககட்சிக கூட்டத்தல் ஆலோசனைககு வரவிருககிறது.

# 'தமிழும் இடம்பெறச் செய்க' இ. போ. ச. முகாமையாளருக்கு நடைமுறைத்தமிழியக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு திருமலை இ. போ. ச. பஸ்கள் அனைத்திலும் தமிழ் புறக்கணிக் கப்பட்டுவருவதாகவும், இப்பகுதி பஸ்களில் டிப்போவின் பெயர்களை தமிழிலும் இடம்பெறச்செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறும் நடைமுறைத் தமிழ் இயக்கம் இலங்கைப் போக்குவரத்துச்சபைத் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளது.

பஸ்களின் பெயர்ப் பலகைகள், அறிவித்தல்கள் வேண்டுகோள்கள் என்பவற்றிலும், தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டும், பிழையாக மொழி பெயர்க்கப்படும் ஊர்ப்பெயர்கள் திரிக்கப்பட்டும் பொறிக்கப்பட்டுள்ள அவல நிலையையும் இக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ்மொழி விசேஷ விதிகளுக்கிணங்க வெளியிடப்பட்ட திறைசேரிச் சுற்றறிக்கை 769 தின் படி இலங்கையிலுள்ள சகல மக்களும் தத்தம் மொழியிலேயே அரசாங்கத்துடன் தொடர்புவைக்க வசதிசெய்யப்பட்டுள்ளதென்றும் ஆனல் இ. போ. சபை தமிழைப் புறக்கணிக்கிறதென்றும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கா. நி.)

## மரண அறிவித்தல்

திரு. கணபதிப்பிள்ளை அரியரத்தினம்

நல்லூரைச் சேர்ந்த செல்லம்மாவின் அன்புக் கணவரும், தங்கபூபதி, காலஞ்சென்ற இரத்தினபூபதி, சிவரெத்தினம் (Chartered Accountant, TURQUAND YOUNG'S & Co.) காந்தபூபதி, டாக்டர் சத்தியமூர்த்தி (யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி) ஆகியோரின் அருமைத் தந்தையும்) ச. செல்லத்துரை (உணவுப்பகுதி தலைமை அலுவலகம்) வீ. பரமானந்தன் (தபால் அலுவலகம் மட்டுநகர், திருமதி லலிதா, வி. பத்மநாதன் (பளை பொதுவேலைப்பகுதி) டாக்டர் (திருமதி) தர்மவல்லி ஆகியோரின் ஆசை மாமனுருமான இளைப்பாறிய பெல்மதுள்ள நகர பொதுவேலைப் பகுதி ஓவஸியரான திரு. கணபதிப்பிள்ளை அரியரத்தினம் 25-ம் திகதி இரவு சிவபதமடைந்துவிட்டார். அன்னரது பூதவுடல் 89, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து இன்று காலை 9-30 மணிக்கு செம்மணி மயானத்துக்கு தகனக் கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும் உறவினர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

1545

கின்றன. (கா. நி.)

## எதிர்ப்பு

கோட்டை, வெள்ளி உள்ளூர் சினிமாத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு பிரதமர் ஒரு ஆலோசனைக் குழுவை நிறுவத் தீர்மானித்துள்ளார். இக் குழுவில் திரு. காமினி பொன்சேகா, சி. பி. பெரேரா, லெஸ்ரர் ஜேம்ஸ் பீரீஸ், ருக்மணிதேவி, ஒலிபரப்பு மா அதிபர் ஆகியோரை நியமிக்க பிரதமர் தீர்மானித்துள்ளதைத் திரைப்பட கலைஞர்கள் சங்கம் எதிர்க்கிறது. இது சம்பந்தமாக இச்சங்கம் பிரதமரைப் பேட்டிகாணவுள்ளது.

லிருந்து வந்த மந்திரியுடன் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும், மற்றும் உத்தியோகத்தர்களும் வந்திருந்தனர். சாவகச்சேரிப் புகையிரத நிலையத்தில் வைத்து உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி.யுமான திரு. எம். சிவதம்பரம் வரவேற்றார்.

சாவகச்சேரி டிரிபேக் கல்லூரி மாணவிகளும், மகளிர் கல்லூரி மாணவிகளும் எனவும் கோரப்பட்டிருந்தது.

மீசாலையில்

மீசாலையில்உள்ள புகையிரதநிலையத்தை வேறோர் இடத்தில் அமைக்கவேண்டுமென்பது பற்றிய பிரச்னையும் ஆராயப்பட்டது. அதன்பின் மீசாலை குடிசைக் கைத்தொழில் நிலையத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அமைச்சர் பேசினர். இங்கு

தச்சன்தோப்பு புகையிரத நிலையம் அதிக பிரயாணிகள் பிரயாணம்செய்யும் நிலையம் எனவும் இதைவிஸ்தரிக்க வேண்டுமெனவும் அமைச்சரிடம் கோரப்பட்டது.

இதுபற்றி ஆராய்வதாக அமைச்சர் தெரிவித்தார். அதன்பின் அமைச்சர் நாவற்குழிப் புகையிரத நிலையத்தையும் பார்வையிட்டபின் தெல்லிப்பளைக்குச்சென்றார்.

# தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, சனி நேற்று இழுக்கப்பட்ட 243-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாம் பரிசு

13 R 0067 ரூ. 100,000

இரண்டாம் பரிசு

13 J 0756 ரூ. 40,000

மூன்றும் பரிசு

08 Y 0873 ரூ. 10,000

தலா ரூபா 517-40 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 21 M 0326 | 23 T 0846 | 25 M 0995 | 04 H 0983 |
| 05 Z 0369 | 08 H 0185 | 17 R 0837 | 09 C 0026 |
| 17 M 0328 | 35 K 0600 | 33 D 0980 | 05 W 0822 |
| 29 H 0639 | 38 X 0863 | 23 B 0453 | 29 B 0292 |
| 19 K 0702 | 29 K 0922 | 13 L 0176 | 10 J 0444 |
| 04 C 0463 | 12 P 0304 | 39 Y 0656 | 09 F 0346 |
| 23 C 0705 | 14 H 0549 | 40 D 0058 | 35 B 0169 |
| 21 Z 0175 | 29 C 0860 | 40 Y 0896 | 18 V 0716 |
| 04 W 0889 | 39 Z 0218 | 33 K 0175 | 16 M 0028 |
| 26 R 0510 | 08 P 0579 | 20 K 0796 | 21 O 0102 |
| 17 W 0872 | 35 E 0347 | 13 X 0131 | 32 G 0125 |
| 33 Y 0067 | 24 Y 0249 | 34 A 0467 | 09 Y 0131 |
| 11 U 0088 | 25 R 0836 | 33 T 0086 | 14 A 0622 |
| 14 M 0729 | 33 X 0309 | 16 W 0224 | 36 H 0903 |
| 18 R 0943 | 22 U 0087 | 25 W 0018 | 17 O 0384 |
| 36 Z 0179 | 12 Z 0489 | 12 G 0428 | 05 P 0863 |
| 24 J 0384 | 33 Y 0590 | 02 H 0967 | 42 Y 0578 |
| 39 Q 0947 | 35 M 0057 | 10 C 0726 | 38 R 0106 |
| 28 C 0048 | 06 L 0271 | 19 U 0484 | 29 W 0909 |
| 05 A 0769 | 33 E 0539 | 16 K 0445 | 26 B 0956 |
| 31 O 0494 | 41 O 0070 | 15 Y 0900 | 14 F 0673 |
| 26 Z 0475 | 13 P 0591 | | |
| 05 B 0833 | 12 H 0399 | | |
| 12 B 0884 | 17 Q 0652 | | |
| 11 B 0161 | 15 E 0732 | | |
| 16 X 0585 | 18 V 0899 | | |
| 17 P 0629 | 10 U 0226 | | |
| 15 K 0975 | 35 N 0350 | | |
| 30 P 0757 | 19 B 0413 | | |

(இவையாவும் உறுதிப் படுத்தப்படவேண்டும்)

## வேலை யிழந்தனர்

மாத்தறை, சனி மாத்தறை மாவட்டத்திலுள்ள நெசவாலைகளில் நெசவு வேலையில் ஈடுபட்டிருந்த ஆயிரத்துக்கும் மேலான பெண்கள் தங்கள் வேலையிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளனர். நெசவுத்தொழிலுக்குத் தேவையான நூல் தட்டுப்பாட்டை தொடர்ந்தே இவர்கள் தொழிலினின்றும் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இப் பகுதியிலுள்ள பல நெசவு நிலையங்களும் இதனால் மூடப்பட்டுள்ளன. இப் பகுதியின் பெரிய ஜவுளி உற்பத்தி நிலையமான கொன்கால மின்தறி நிலையத்தின் உற்பத்தி வேலையும் நூல்பற்றுக்குறையினல் தடைப்பட்டுள்ளது.

# மூன்றுபெண்களும்விடுதலை

வல்வெட்டித்துறை, சனி புலோலி தெற்கைச் சேர்ந்த ஆ.சிவபாக்கியலோகேஸ்வரி, ஆ.இரத்தினமணி, ஆறுமுகம் கைம்பெண் முத்தம்மா ஆகிய மூவரும் அதே இடத்தைச் சேர்ந்த அருளம்பலம் விசுவலிங்கத்திற்கு கடந்த வருடம் மார்கழி மாதம் 18-ந்திகதி அடித்துக் காயப்படுத்தியதன் விளைவாக மரணம் சம்பவித்ததெனப் பொலிசாரால் குற்றம்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

த. ஆள்வாப்பிள்ளை, சி. மீனுட்சி, கான்ஸ்டபிள், விமலசூரியா, ஆ. இரத்தினமணி, இன்ஸ்பெக்டர் ஜயசூரியா, ஆயுள்வேத டாக்டர் செல்லையா, வி. மயில்வாகனம் ஆகியோர் சாட்சியமளித்தபின் மாஜிஸ்டிரேட் எதிரிகளை சுற்றவாளிகளாகக் கண்டு விடுதலைசெய்தார்.


சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டாலர் அலுமினியம்

ONE-DOLLAR


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...பரம்

### தேவை

நெசவு செய்வதில் அனுபவமுள்ள பெண்கள்தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். கருணை நெசவு நிலையம், ''கண்ணகிரி'', இடந்தரை ஒழுங்கை, காங்கேசன் துறை. 974

### விற்பனைக்கு

ஐயனார்கோவிலடி வீதி வண்ணார்பண்ணை மேற்கில் 5 பரப்பு வீடுகட்டக்கூடிய நிலம் ரோட் ஓரமாய் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: S. செல்வராசா, புறக்ரர், 25, சப்பல் தெரு, யாழ்ப்பாணம். 973

காணி:

கொக்குவில் ஸ்டேசன் ரோட்டில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ச. சின்னத்துரை, றயில் ரோட், கொக்குவில். 975


ராஜா 104வது தினம் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலா)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

இன்று மட்டும்
மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி நடித்த
தாய்சொல்லைத் தட்டாதே

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30மணி
சுப்பையா — பத்மினி நடித்த
கண் கண்ட தெய்வம்

MANOHARA
JAFFNA
Daily 6-30 & 10-00 P.M.
D. R. Nanayakkara.
Jeewarani, Santhia Kumari
in
BICYCLE HORA
(Sinhalese)


## யாழ்ப்பாண மாநகரசபை வரியிறுப்பாளர்களுக்கு அறிவித்தல்

## சோலைவரி ...ம் கந்தாயம்1969

28-3-69-ம் திகதிய 14847-ம் இலக்க அரசாங்க வர்த்தமானி (பகுதி4)யிலும் 16-3-69-ம் திகதிய தமிழ் தினசரியான ''ஈழநாடு''பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம், 1969-ம் ஆண்டு 1-ம் கந்தாய சோலைவரிப் பணம் செலுத்தும் திகதி 3-5-69-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது எனவே சோலைவரிப் பணம் யாவும் 3-5-69-ம் திகதி சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு முன்னர் மாநகர சபை அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் 10% வெலியாத்துப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக் கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 3-5-69-ம் திகதி பி. ப. 3 மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அவ்விதம் பணம்அனுப்பும் பொழுது வீட்டு இலக்கம், தெருப் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்கள் தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும்.

ஏ. ரி. சுந்தரம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
25-4-69. 1543

### அமெரிக்க மனைவி

காந்தியின் பூட்டப் பிள்ளையான கே. சாந்திகுமார் அமெரிக்காவைச் சேர்ந்த தாதிப் பெண்ணான 'போர்ஸ்' என்பவரை அடுத்த மாதம் 3ந் திகதி திருமணம் செய்யவிருக்கின்றார்.


REGAL at JAFFNA
Daily 4-45, 7 &9-45 p m.
Poya, Pre-Poya 10-30 A.M.
Kirk Douglas
Richard Harris
in
THE HEROES OF TELEMARK

ராணி
[யாழ்ப்பாணம்)
[தினசரி 3காட்சிகள்]
* ஜெய்சங்கர்
* விஜயகுமாரி
நடித்த


## சனசமூக நிலைய உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்டசனசமூக நிலையங்களுக்கிடையே விளையாட்டமைச்சினால் நாடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின்முடிவுகள்சில பின்வருமாறு;

### சென் நிக்கிலாஸ் வெற்றி

நாவாந்துறைசென் நிக்கிலாஸ் சனசமூக நிலையக் கோஷ்டிக்கும், குருநகர் சனசமூக நிலைய 'பி' பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் இடைவேளைக்குப்பின் சென். நிக்கிலாஸ் கோஷ்டி மிகவும் திறமையாகவும் வேகமாகவும் விளையாடி எதிர்க் கோஷ்டியை, ஆட்ட முடிவில் 2 1 கோல்களால் வெற்றி பெற்றது.

யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. ஞானப் பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### சமமான முடிவு

குருநகர் சனசமூக நிலைய 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்கும், பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்கக் கோஷ்டிக்குமிடையில் ஆட்டம் முடிவடையும்வரை நடைபெற்ற கடுமையான போட்டி எக்கோஷ்டிகளும் கோல்கள் எதுவும்போடாத நிலையில் சமமான நிலையில் முடிவுற்றது. பாசையூர் மக்கள் முன்னேற்றச் சங்கக் கோஷ்டியின் பின்னணி வீரர்களான தேவபாலன், கிளறன்ஸ் ஆகியோரின் விளையாட்டு ரசிகர்களின்பாராட்டைப் பெற்றது. யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ராஜேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### கந்தர் மடம் வெற்றி

கந்தர்மடம் சனசமூக நிலையக் கோஷ்டிக்கும், பாசையூர் சென். அன்ரனிஸ் சனசமூக நிலைய 'பி' பிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ரசிப்பான போட்டியில் கந்தர் மடம் கோஷ்டி எதிர்க் கோஷ்டியை 3 - 2 கோல்களால்தோற்கடித்தது.

பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஞானப் பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### சென். மேரிஸ் வெற்றி

நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையக் கோஷ்டிக்கும் பாசையூர் சென். அன்ரனிஸ் சனசமூக நிலையக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் சென். மேரிஸ் மிகவும் திறமையாக விளையாடி பாசையூர் கோஷ்டியை 3—0 கோல்களால் தோற்கடித்தது. அடைக்கலம் அன்ரன், அரியகுமாரன் ஆகியோர் முறையே இக் கோல்களைப் போட்டனர். பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. தேவபாலன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

(தே. நி)

## கிளித்தட்டுச் சுற்றுப்போட்டி

அல்லைப்பிட்டி, சனி

செல்லத்துத்துரை ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்திற்காக புளியங்கூடல் ஜனசமூக நிலையத்தினரால் வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் கிளித்தட்டுச் சுற்றுப்போட்டி புளியங்கூடல் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப் போட்டியில் வேலணை தேவி கோட்டம் ஜனசமூக நிலையக் கோஷ்டியினரும் வேலணை சந்திரா விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டதில் 11-5 பழங்களால் சந்திரா தோல்வியுற்றது. ஊர்காவற்துறை றேஞ்சஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் கரம்பன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் றேஞ்சஸ் விளையாட்டுக்கழகம் 5-2 பழங்களால் கரம்பன் விளையாட்டுக்கழகத்தை வெற்றியீட்டியது. இப்போட்டிகளுக்கு தீவுப்பகுதி விளையாட்டுப் போதனாசிரியர் பி பொன்னுச்சாமி மத்தியஸ்தராக கடமையாற்றினர்.

......

## மைதானம் இல்லையாம்

கோப்பாய், சனி

கோப்பாய்க் கிராமத்தில் ஒரு சிறந்த பொது விளையாட்டுமைதானம் இல்லையே என்ற கவலை விளையாட்டுப் பிரியர்கள் மத்தியிலும் விளையாட்டுக் கழகங்கள் மத்தியிலும், உடற்பயிற்சிக் கழகங்கள் மத்தியிலும்

சுன்னாகம் பொலிஸ் பகுதி

# ஈழநாடு வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வலிகாமம் வடக்கு, உடுவில் பகுதி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் சுன்னாகம் பொலிஸ் பகுதியினரால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி தேசிய சேவை அமைச்சின் விளையாட்டுப் பகுதி உதவி நிர்வாகஸ்தர் டாக்டர் ஜேஸி. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் பரிசில்கள் வழங்கினார்.

போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

சுன்னாகம் இளந்தென்றல் மன்றத்தினருக்கும், சுன்னாகம் தெற்கு காந்தி ரூபன் விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்ட இறுதி போட்டியில், சுன்னாகம்இளந்தென்றல்மன்றத்தினர் டாக்டர் சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றனர். இவர்கள் இரண்டாவது தடவையாக இவ்வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகத்திற்கும் உடுவில் மல்வத்தை விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடந்த தாச்சி இறுதிப் போட்டியில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் முருகேசு வெற்றிக்கிண்ணத்தைப்பெற்றது.

46 மைல் மரதன் ஓட்டப் போட்டியில் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த முருகையா 'ஈழநாடு' வெற்றிக்கிண்ணத்தைப்பெற்றார். இரண்டாம் இடத்தை செல்வரத்தினம் பெற்றார்.

10 மைல் பெண்கள் சயிக்கிள் ஓட்டம 1. பத்மா தமபு (காந்தி ரூபன் விளையாட்டுக் கழகம்), 2. டில்லிமலர் வல்லிபுரம் (உடுவில்).

சிறுவர் சயிக்கிள் ஓட்டம்: 1. ஜெயராசா (உடுவில், 2 ஆர். ராஜகாந்தன் (காந்தி ரூபன் வி. க.).

போர்த்தேங்காய் அடித்தல்: 1. கே. கணேசு (அளவெட்டி மத்திய வி. க., 2. கே. தம்பு (இணுவில் இந்து வி. க.).

வினோத உடைப் போட்டி: 1. கே. மாணிக்கம் (காந்தி ரூபன் வி. க.) 2. எஸ். சிவானந்தன் (இணுவில் இந்து வி க.).

கயிறுஇழுத்தல்; இணுவில் இந்து வி. க., உடுவில் மல்வத்தை வி. க.

மாட்டுவண்டிச்சவாரி முதலாம் பிரிவு: 1. கே. சின்னத்தம்பி (உடுவில்), 2 எம் கந்தையா (அளவெட்டி), இரண்டாம் பிரிவு- 1. ஆர். சிவப்பிரகாசம் (பண்டத்தரிப்பு), 2. வி. பிள்ளையார் (உடுவில்). (கா. நி.)

## தாக்குதல் வழக்கு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, சனி

புலோலியைச் சேர்ந்த மு. யோகசம்பந்தன், வி. யோகசுந்தரம், வே. கதிர்காமலிங்கம் ஆகியோர் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் வைத்து பொலிஸ் சார்ஜண்டைத் தாக்கியதாகப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணையை பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு கே. விக்னராசா அடுத்த மாதம் 14-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 27—4—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45துதிப்பாடல்கள், 7-10 உள்ளூர்ச் செய்திகள் 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 பாட்டு.

344 மீ. அன் 61 மீ.

மாலை 4-30 மெல்லிசை, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 மாணவர் நிகழ்ச்சி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-10 பேச்சு, 6-15 கிளாரினெட், 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 கர்நாடக இசை, 7-35 வாத்திய இசை, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 கர்நாடகஇசை, 10-00 நேயர்விருப்பம், 10-30 செய்திச்சுருக்கம்.

## ''பத்திரிகா தர்மம் மலரவேண்டும்''

மட்டக்களப்பு, சனி

''பத்திரிகைகள் மிகவும் சக்தி வாய்ந்தவை. மக்கள் நலம் பேணும் கடமையை அவை நினைவில் கொள்ள வேண்டும். அதைத் தான் பத்திரிகா தர்மம் என்று சொல்வார்கள்.

விற்பனையைப் பெருக்குவதற்காகப் பத்திரிகைகள் எதையும் வெளியிடலாம் என்றால் பணத்துக்காகத் தன் கற்பை விற்கத் துணியும் பெண்ணுக்கு அப்பத்திரிகைகளை ஒப்பிடலாம். எனவே அப்படிச் செய்வதைப் பத்திரிகா விபச்சாரம் என்று வர்ணிக்கலாம்.

வாசகர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வது தான் பத்திரிகைகளின் நோக்கமென்றால் அதைவிடப் பெரிய துரோகம் வேறு இருக்கமுடியாது. வாசகர்கள் விரும்புவதைத் தருவது அல்ல பத்திரிகைகளின் கடமை. மக்கள் எதை விரும்பவேண்டுமோ அதைத் தருவது தான் பத்திரிகைகளின் கடமை. மக்களுக்குப் பயன்படத்தக்க விஷயங்களைத் தான் பத்திரிகைகள் தரவேண்டும்.

'ஈழநாடு' பத்திரிகை அன்று முதல் இன்று வரை பத்திரிகா தர்மத்தைக் கடைப்பிடித்து வருகிறது என்பதை நாம் அறிவோம்.

ஈழத்துப் பத்திரிகை உலகில் பத்திரிகா விபச்சாரம் மறைந்து பத்திரிகாதர்மம் நிலைக்க வழி செய்யவேண்டும்,

இவ்வாறு கூறும் ஓர் அறிக்கையை மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## பரமேஸ்வரக் கல்லூரி யாழ்ப்பாணம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) வகுப்புக்கள் (கலை, விஞ்ஞானப் பகுதிகள்) 5-5-69 திங்கட்கிழமையன்று ஆரம்பிக்கப்படும். சேர விரும்பும் மாணவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளவும்.

அதிபர்.

1544

## 'ஈழநாடு' செய்தி தலைப்பு போட்டி-(1)

பல வருடங்களுக்கு முன்பு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் ஒரு பிளவு ஏற்பட்டு இரண்டு கட்சிகள் தோன்றின. இரு கட்சிகளும் பொது மக்களின் ஆதரவைத் தேடி ஒன்று திருப்பரங்குன்றத்திலும் மற்றது திருச்செங்கோட்டிலும் மாபெரும் கூட்டங்கள் நிகழ்த்தின. இவற்றின் பலனாக திருச்செங்கோடு கூட்டத்துக்கு மக்கள் ஆதரவு பெருமளவில் கிடைத்தது. திருப்பரங்குன்றத்து கூட்டத்துக்கு அவ்வளவு ஆதரவு கிடைக்கவில்லை'

அக்காலத்தில் 'திராவிடநாடு' பத்திரிகையின் ஆசிரியராயிருந்த காலஞ்சென்ற அறிஞர் அண்ணா மேற்கண்ட செய்தியை பிரசுரிக்கும் போது, 'கோடு உயர்ந்தது, குன்றம் தாழ்ந்தது' என்று அதற்கு தலைப்பு கொடுத்தார்.

இன்றைய...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BICYCLE HORA (Sinhalese) | TELEMARK

ராணி
[யாழ்ப்பாணம்]
[தினசரி 3காட்சிகள்]

* ஜெய்சங்கர்
* விஜயகுமாரி
நடித்த

# ஜீவனாம்சம்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜிகணேசன் ★ ஜெயலலிதா
ஏ. வி. எம். ராஜன், ஜோதிலக்ஷ்மி
சோ, நாகேஷ்
நடித்த
ராம்குமார் பிக்சர்ஸ்

# கலாட்டா கல்யாணம்

2வது வாரம்!

இங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன், (யாழ். நகர்) | விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மற்றும் சினிமாஸ் திரைகளில்




கலைப்பேரரசர் எம். ஜி. ஆர்.
ஆடலழகி ஜெயலலிதா
எம். ஆர். ராதா, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடிந்த
சரவணா பிலிம்ஸ்

# சந்திரோதயம்

டைரக்ஷன்: கே. சங்கர்

மைலன்
(கொழும்பு)
எம் கே ராதா — ஜி வரலக்ஷ்மி
நடித்த

# பாசவலை


மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## இன்றைய பலன்

27-4-69
சௌமிய வருடம்
சித்திரை மீ 15-ம் உ
ஞாயிற்றுக்கிழமை

திதி- தசமி பகல் 2-15 மேல் ஏகாதசி.

நட்சத்திரம்- மகம் பகல் 1-44 மேல் பூரம்.

ராகுகாலம்- 4-28—5-58.

சுபநேரம்- 8-58—10-28.

---

இன்று பிறந்தவர்களுக்கு — வருட ஆரம்பத்தில் ஏற்படும் ஏமாற்றங்கள் நடுப்பகுதியில் நல்லதிருப்பங்களை அடையும். கலைஞர்கள் போற்றப்படுவார்கள். பெண்கள் வாழ்க்கையில் அவப்பெயர்களுக்கு இடமேற்படமுடியும். கடற்தொழிலாளர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும் நீண்டநாள் குரோதம் இவ்வாண்டு சமரசத்துக்குவரக்கூடும்.

---

மேஷம்- இலட்சியப் பயணம், இன்பநாள்,
ரிஷபம்- வசதிகள் பெருகும், புகழ் பரவும்,
மிதுனம்- எதிர்பாராத வரவு, விருந்துண்ணல்.
கடகம்- வேலையில் தடை, வேதனை மிகுதி.
சிம்மம், அடி சறுக்கும் ஆணவத்தை அடக்கு.
கன்னி- சொற்சிறப்பு சொகுசான வாழ்வு.
துலாம்- தடைகள் தாக்கும், தாமதமிகுதி.
விருச்சிகம்- நல்லமுடிவு நன்மைகள் சேரும்.
தனுசு- புத்திரர் புகழ் புதிய உற்சாகம்.
மகரம்-கழுகுப்பார்வை கவலையின் தாக்குதல்.
கும்பம்- துளிர்விடும் காதல், ஒளிவிடும்வாழ்வு.
மீனம்- சிநேகிதர்பகை, சிறு பிணி.

சோதிடக் கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

ஒரு சிறந்த பொது விளையாட்டு மைதானம் இல்லையே என்ற கவலை விளையாட்டுப் பிரியர்கள் மத்தியிலும், விளையாட்டுக் கழகங்கள் மத்தியிலும், உடற்பயிற்சிக் கழகங்கள் மத்தியிலும் நிலவிவருகிறது.

இதையிட்டு மேற்படி கழகங்கள் பல ஒன்றுசேர்ந்து சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளை ஆவன செய்துதவுமாறு கோரவிருக்கின்றன.

## சமய அறிவுப் போட்டி

கோப்பாய், சனி

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தார் வழமைபோல இவ்வருடமும் திருஞானசம்பந்தர் விழாவையொட்டிச் சமய அறிவுப் போட்டியை ஏற்பாடுசெய்துள்ளனர். சைவ சமய மாணவ மாணவிகள் மத்தியில் நடாத்தப்படும் இப்போட்டியின் முடிவுத் திகதி அடுத்த மாதம் 24ந் திகதியென அறிவிக்கப்பட்டுள்ளது.

## வட்டுக்கோட்டையில் வள்ளுவர் விழா

சித்தங்கேணி, சனி

எதிர்வரும் மே மாதம் முதலாந் திகதி திருவள்ளுவர் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட வட்டுக்கோட்டைக் கலைக் கழகம் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது. இவ்விழாத் தொடர்பான வட்டுக்கோட்டைத் தொகுதி உட்பட வலிகாமம் மேற்குப் பகுதியினருக்கான போட்டிகள் முடிவுற்றன.

அகில இலங்கைத் தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் வித்துவான் திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், அறிஞர்கள் பங்குகொள்ளும் விவாத அரங்கு, போட்டிகளில் முதற் பரிசு பெற்றவர்களின் நிகழ்ச்சிகள், கலைக் கழக மாணவிகளின் வயலின், திருமுறைப் பண்ணிசை, கலையகம் அளிக்கும் நாடகம் ஆதியன இடம்பெறும். வட்டுக்கோட்டை கலாநிலையத் திறந்தவெளியரங்கில் இவ்விழா நடைபெறவிருக்கின்றது.

......

## பொலிஸ் வெசாக் கரோல்

கொழும்பு, சனி

பொலிசாரின்வெசாக் பண்டிகை கரோல் இன்றுமாலை 6-30 மணிக்கு பொலிஸ் பூங்காவில் நடைபெறவிருக்கின்றது.

வகுப்புக்கள் (கலை, விஞ்ஞானப் பகுதிகள்) 5-5-69 திங்கட்கிழமையன்று ஆரம்பிக்கப்படும். சேர விரும்பும் மாணவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளவும்.

அதிபர்.

1544

## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி வகுப்புப் பகுதி

### பிரவேசம் — மே 1969

(1) பொதுத் தராதரப் பத்திரப்பரீட்சை (உயர்தர) தமிழ் மூலம் விஞ்ஞானம் கலை முதலாம் வருட வகுப்புகள்.

(2) பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை(உயர்தர) தமிழ்மூலம் விஞ்ஞானம், கலை இரண்டாம் வருட வகுப்புகள்.

(3) பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை(உயர்தர) தமிழ், ஆங்கில மூலங்களில் விஞ்ஞான மீட்டல் வகுப்பு.

இவற்றிற்கான பிரவேச விண்ணப்பப்பத்திரங்களையும், விபரப் பிரதியையும் பெறுவதற்கு முகவரி எழுதிய முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட கடித உறையுடன் ஒரு ரூபா போஸ்டல் ஓடரும் அனுப்பவும்.

விண்ணப்பப் பத்திரங்கள் 5-5-69 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவாளர்.

வட்டுக்கோட்டை.

1542

## விளம்பரம்

### இலங்கைக் கலைக்கழகம் பாடசாலை நாடகப்போட்டி 1969.

இலங்கைக் கலைக் கழகத்துத் தமிழ் நாடகக் குழு 1969-ஆம் ஆண்டில் பாடசாலைத் தமிழ் நாடகப் போட்டியொன்றை நடாத்தும். பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் மே மாதம் 30-ஆம் திகதிக்கு முன்னர் உரிய பத்திரத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தையும் விபரங்களையும் மாவட்டக் கல்வி அதிகாரிகளிடமிருந்தும் கலைக் கழகத்திடமிருந்தும் பெறுக.

தமிழ் நாடகக் குழு,
இலங்கைக் கலைக்கழகம்.

135, தர்மபால மாவத்தை,
கொழும்பு—7.

1540

குன்றத்து கூட்டத்துக்கு அவ்வளவு ஆதரவு கிடைக்கவில்லை'

அக்காலத்தில் 'திராவிடநாடு' பத்திரிகையின் ஆசிரியராயிருந்த காலஞ்சென்ற அறிஞர் அண்ணா மேற்கண்ட செய்தியை பிரசுரிக்கும் போது, **'கோடு உயர்ந்தது, குன்றம் தாழ்ந்தது'** என்று அதற்கு தலைப்பு கொடுத்தார்.

எல்லோரும் அண்ணாவைப் போல அளகான தலைப்பு கொடுக்கும் ஆற்றல் பெற்றவர்கள் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. இருப்பினும், பின் வரும் செய்திக்கு கிட்டத்தட்ட அதே மாதிரியான அர்த்த புஷ்டியுள்ள, கவர்ச்சியான, எதுகை மோனையுடன் கூடிய அழகான தலைப்பு ஒன்று எழுதுங்கள், பார்க்கலாம்,

### இது தான் செய்தி

'சந்திரனிலுள்ள 'சோகக் கடல்' என்னும் பிரதேசத்தில் இறங்கிய விண்வெளி வீரர்களுக்கு அங்கே முற்றிலும் எதிர் பார்த்திராத ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. எரிமலையின் வாய் போன்ற அந்தப் பெரிய பள்ளத்தாக்கின் செங்குத்தான பக்கங்களில் இருட்டறைகள் போன்ற விசாலமான குகைகள் காணப்பட்டன. அம்புலியில் இரவு நேரம் சமீபித்ததும் இந்த குகைகளில் இவ்விரண்டு கருநீல வெளிச்சங்கள் பளிச்சிட்டன. சிறிது நேரத்தில் அந்த வெளிச்சங்களுக்கு சொந்தமான உயிருள்ள உருவங்கள் வீரர்களை நோக்கி மெல்ல மெல்ல அணுகத் தொடங்கின, பயங்கரமான இந்த பிராணிகளைக் கண்டு பயந்த வீரர்கள் தங்கள் அணுத்துப்பாக்கிகளால் அவற்றின் மீது சுட்டார்கள். ஒன்றும் நடக்கவில்லை. அப்பிராணிகள் தொடர்ந்து முன்னேறி வந்தன. வீரர்கள் உடனே இரண்டே இரண்டு பாய்ச்சலில் தங்கள் ரொக்கட்டை அடைந்து உள்ளே புகுந்துவிட்டார்கள். மேற்கொண்டு செய்திகள் எதுவும் அவர்களிடமிருந்து கிடைக்கவில்லை.'

### நிபந்தனைகள்

விடைகளைக் கீழ்க்காணும் கூப்பனிலேயே தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். விடைகள் யாவும் 30-4-69-க்கு முன் எமக்கு வந்துசேரவேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் எழுதி ஒரே உறையில் வைத்து அனுப்பலாம். அனுப்பவேண்டிய விலாசம்:- செய்தித் தலைப்புப் போட்டி (1) 'ஈழநாடு', த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம். விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளவேண்டாம். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ள முடியாது. மிகச் சிறந்த விடைக்கு ரூபா ஐந்து (ரூ. 5|-) பரிசுப் பணமாக வழங்கப்படும்.

'ஈழநாடு'
செய்தி தலைப்பு போட்டி-(1)

விடை: .....................................

.....................................

பெயர் : .....................................

விலாசம் : .....................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஞ்சு அரசியல் சீர்திருத்தங்கள்

# மக்கள் மறுத்தால் உடனே டிகால் ராஜினுமா செய்வாராம்

## அதிபர் பதவிக்கு மீண்டும் போட்டியிடவும் மறுப்பு

### இன்று பிரான்சில் பொது வாக்கெடுப்பு நடக்கிறது

பாரிஸ், ஏப். 26

பிரெஞ் அதிபர் டி கோல் பதவியிலிருந்து விலகப்போவதாக மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதிபர் டி கோலின் பிரெஞ் அரசியல் சீர்திருத்தத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பு நாளையதினம் நடைபெறவிருக்கின்றது. இந்த வாக்கெடுப்பில் மக்கள் தமது திட்டத்தை நிராகரித்துவிட்டால் உடனடியாகப் பதவியிலிருந்து விலகிவிடப்போவதாக அதிபர் டி கோல் பிரெஞ் மக்களுக்கு அறிவித்தார்

வாக்கெடுப்பு நாளை நடப்பதையொட்டி அவர் விடுத்த கடைசி வேண்டுகோள் ஒன்றிலேயே இந்த எச்சரிக்கையை அறிவித்தார்.

பிரெஞ் அதிபர் தமது அதிபர் பதவிக்காலம் 1972-ம் ஆண்டில் முடிவடையும் போது மீண்டும் அப்பதவிக்காகத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென்றும் அறிவித்துள்ளார்.

பிரெஞ் அரசியல் திட்டத்தில் பிராந்திய ஆட்சிமுறையிலும் செனட் அமைப்பிலும் மாறுதல்களையும் சீர்திருத்தங்களையும் ஏற்படுத்துவதற்கான திட்டமொன்றை அதிபர் டி கோல் அறிவித்திருக்கின்றார். இந்த மாற்றங்களை மக்கள் விரும்புகிறார்களா இல்லையா என்பதை அறிவதற்காக நாளையதினம் ஒரு வாக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அநேகமாக 51 வீத மக்கள் டி கோலின் திட்டத்துக்கு எதிராகவே வாக்களிப்பார்களென்று கருதப்படுவதாலேயே அவர் இப்பொழுது பதவியிலிருந்து விலகப் போவதாகப் பயமுறுத்துகிறார் என்று பார்வையாளர்கள் நம்புகிறார்கள். பெரும்பான்மையான மக்கள் டி கோலின் திட்டத்தை ஆதரிப்பதா இல்லையாவென முடிவுசெய்யாமலிருப்பதாகவும் கூறப்படுகின்றது. இவர்களை டி கோல் தம் சார்பாக ஈர்த்துக்கொள்வாரானால் அவருடைய திட்டம் வெற்றிபெற்றுவிடும் என்றும் கருதப்படுகின்றது.

---

# அமைச்சர்களுக்கு பொது விருந்து வேண்டாம்

### கருணாநிதி அறிவிப்பு

சென்னை, ஏப். 26

தமிழ் நாட்டில் பொது விருந்து வைபவங்களில் தமிழ் நாடு அமைச்சர்கள் இனிமேல் கலந்து கொள்ள மாட்டார்கள்.

நாட்டில்வறட்சி ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் குடிக்கதண்ணீகிடைக்காமல்

திருவள்ளூரில் அமைச்சர் ப. உ. சண்முகம் வீட்டுத் திருமணத்தில் முதல்-அமைச்சர் கருணாநிதி கலந்து கொண்டார்.

பின்னர் அவர் அங்குள்ள ஒழுங்குமுறை சந்தையைப் பார்வையிட்டார். அடுத்து அவருக்கு தேநீர விருந்து

வறட்சி நிலை நீங்கும் வரை இது போன்ற தேநீர் விருந்துகளில் கலந்து கொள்வதில்லை எனத் தீர்மானித்திருக்கிறேன். என்றார்.

இன்று முதல் வறட்சி நிலை மாறும் வரை இது போன்ற தேநீர் விருந்துகளில் எந்த அமைச்சர்களும்

---

## வீழ்ச்சியுற்ற நகரை கைப்பற்றி விட்டார்களாம்

### பியாப்ரா கூற்றை நைஜீரிய மறுக்கின்றனர்

லேகோஸ் ஏப்ரல். 26

நைஜீரிய சமஷ்டி படைகள் பியாப்ராவின் முக்கிய நகரான உமுவாஹையாவைக் கைப்பற்றுவதற்காக மூர்க்கத்தனமாக பொது மக்கள் வசித்த பகுதிகளில் எல்லாம் குண்டுகளை வீசி அக்கிரமம் செய்ததாக தெரிவிக்கப்பட்ட குற்றசாட்டுக்களை நைஜீரிய அரசாங்கம் மறுத்திருக்கிறது.

உமுவாஹையாவுக்கு விஜயம் செய்த பார்வையாளர்களும் அங்கு மூர்க்கத்தனமாக குண்டு வீச்சு நடைபெற்றதற்கான அறிகுறிகள் காணப்படவில்லையென்றும் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் உமுவாஹையா நகரை பியாப்ரா படையினர் மீண்டும் கைப்பற்றி விட்டதாக அறிவித்துள்ளனர். அனுல் லேகோஸில் இதுபற்றி தமதுபடை தளபதிகளிடமிருந்து செய்திகளெதுவும் கிடைக்கவில்லையென்று நைஜீரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

# பூரி சுவாமிகள் மீதான வழக்கு

### மூவர் சாட்சியம்

பாட்னு, ஏப். 26

மார்ச் 31-ந் தேதியன்று பாட்னுவில் ஒரு மகாநாட்டில் தீண்டாமை குறித்து தெரிவித்தகருத்துகளுக்காக பூரி சங்கராச்சாரியார் மீது பீஹார் யுவஜனத் தலைவர் சிவானந்த திவாரி தொடுத்துள்ள வழக்கில் மூன்று பேர்கள் சாட்சியமளித்தனர்.

பாட்னு நகரமுதல்வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்டில் இவ்வழக்கு விசாரணை நடைபெறுகிறது. சம்யுத்த சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இந்திரகுமார் எம். எல். சி., ச. சோ. கட்சி ஊழியர் ராமேஸ்வர் பிரசாத் சிங், பாட்னு பல்கலைக்கழக மாணவர் ஐதுநந்தன் திரிபாதி மான தேவதாபிரசாத் சௌதரி ஆஜராகி இருந்தார்.

மேற்கொண்டு சாட்சிகள் ஏப். 28-ந் தேதி விசாரிக்கப்படுவர். மே மாதம் 5-ந்தேதிக்குள் மாஜிஸ்டிரேட் தமது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்என்று சப்டிஷனல் அதிகாரி கணேஷ் பிரசாத் உத்தரவிட்டிருக்கிறார்.

தீண்டாமை சட்டம், இந்திய குற்றத் தண்டனை விதித்தொகுப்பு (இ. பி கோ.) ஆகியவற்றின் கீழ் இவ்வழக்கு தொடரப்பட்டுள்ளது,

மத்திய உணவு மந்திரி ஜெகஜீவன்ராம், முன்னாள் காங்கிரஸ் தலைவர் டி. சஞ்சீவையா, பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் மதுலிமாயி,

---

அமெரிக்க உளவு விமானம்

## வீழ்ந்து நொருங்கியதில் 18 பேர் பலி

வாஷிங்டன், ஏப். 26

அமெரிக்க உளவுவிமானம்ஒன்று பூமியிலிருந்து பறப்பதற்கு எத்தனிக்கையில் விபத்துக்குள்ளாகி வீழ்ந்துநொறுங்கியது. இந்த விபத்தில் விமானத்திலிருந்த 18 பேரும் பலியானுர்கள். தாய்லாந்திலுள்ள ஒரு விமானத்தலத்தில்இந்த விபத்து ஏற்பட்டது. வட கொரியா வினுல் அண்மையில்சுட்டுவீழ்த்தப்பட்டதைப் போன்றதே இந்த விமானமும்.

---

## நகைப்பெட்டி திரும்பியது

சென்னை, ஏப். 26

மணப்பெண் கோஷ்டி ஒன்று நுங்கம்பாக்கத்திலிருந்து டாக்சியில் பெரம்பூர் பாரக்ஸ் ரோட்டிலுள்ள வள்ளியம்மாள் கல்யாண மண்டபத்துக்குச் சென்றது. டாக்சியிலிருந்து அனைவரும் இறங்கிக்கொண்டனர். கட்டணம் கொடுத்தவுடன்டாக்சி சென்றுவிட்டது.

நகைகளும், பட்டுப் புடவைகளும்உள்ள பெட்டியை டாக்சியின் பின்புறம் 'டிக்கி, யிலிருந்து எடுக்க மறந்துவிட்டது என்பது பின்னர் தான் மணப்பெண் கோஷ்டியினருக்குத் தெரிந்தது. தாங்கள் ஏறிவந்த டாக்சியை வலைபோட்டுத் தேடினுர்கள். இரவு 10 மணி ஆகிவிட்டது, இனி தேடுவதில் பயனில்லை என்று நம்பிக்கை இழந்துவிட்டனர். சிறிதுநேரத்துக்குள் அவர்கள் வந்திறங்கிய டாக்சியே வந்தது. டிரைவர் சங்கர் நகைகளும், பட்டுப் புடவைகளும் அடங்கிய பெட்டியை கல்யாண கோஷ்டியினரிடம் ஒப்படைத்தார். டிரைவரின் நேர்மையை அனைவரும் பாராட்டினர்.

......

## மொட்டை அடித்தார்

### காங்கிரஸ் உறுப்பினர்

புதுடில்லி, ஏப்ரல் 26

தேசபிதா காந்திஜியின் இறுதி விருப்பத்திற்கிணங்க காங்கிரஸ் கட்சியை பரீதாபாத் மகாநாட்டில் கலைத்துவிடவேண்டுமென்றுகோரும் உத்தியோக சார்பற்ற ஒரு தீர்மானத்தை அனுப்பிய

---

## "ஏன் பிறந்தேன் எ... ஆராய்ச்சி நடக்கிறது"

### சைவ மாநாட்டில் சித்தாந்த வித்தகர் உரை

யாழ்ப்பாணம், சனி

'தற்காலத்தில் எந்த விஷயத்தைப்பற்றியும்ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. ஏன் பிறந்தேன் என்பதற்கு கூட ஆராய்ச்சி நடக்கிறது. 'நான் ஏன்பிறந்தேன்மகனே என்று சினிமாப்பாட்டுகூட இருக்கிறது. இப்படி ஆராய்ச்சி செய்வதால் கடவுள் பக்தி குறைந்துவிடுகின்றதென அறிஞர்களே கூறியிருக்கின்றன. கடவுள்பக்தி ஆராய்ச்சியினுல் 75 சத வீதம் குறைந்துள்ளது என்பது உண்மை'

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த சைவமகாநாட்டு மூன்றுவது நாள் நிகழ்ச்சியின்போது சித்தாந்த வித்தர் சோமசுந்தரஞ் செட்டியார் மேற்கண்டவாறு கூறினுர்.

சித்தாந்தவித்தகர் திரு. வே. நாகலிங்கம் தலைமையில் நேற்றுமாலை நடந்த மகாநாட்டில் திரு. சோமசுந்தரஞ்செட்டியார் கூறியதாவது: அதிகம் ஆராய்ச்சி நடத்துவதால் ஒன்றுமே விளங்காது. சிற்றறிவுடைய மனிதனுக்கு ஆராய்ச்சியினுல் உண்மை விளங்காது ஆராய்ச்சி செய்து முடிவு காணுமலே பலர் இறந்துவிட்டார்கள்.

திருக்கோவையார் திருவாசகம்படிக்காதவர்களை சைவர்கள் என்று எப்படி சொல்லமுடியும் திருக்கோவையார் படிப்பதற்கே ஆளில்லை. இரண்டு மூன்று பாடல்கள் தெரிந்தவர்கள் கூடக் கிடையாது. திருக்கோவையார் பதுப்பிக்க தமிழ்நாட்டில் முயற்சிநடைபெறுகிறது.

சைவபரிபாலனசபை பெரியவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. என்னவந்தாலும் தொடர்ந்து சைவத்திற்காக இச்சபை பணிபுரிந்துவரும். இச்சபை நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழும் என்ற நம்பிக்கை எனக்குண்டு நாவலர் சங்கடமான காலத்தில் சைவசமயத்தை காப்பாற்றினுர். இப்பொழுது அப்படியான சங்கடமான காலமில்லை. எதிர்ப்புஎதுவும் கிடையாது ஆதலால் சைவத்திற்கு பல விதத்திலும் தொண்டாற்றலாம்.

தோத்திரம் ஒருகண், சாஸ்திரம் மற்றஒருகண். இரண்டும் பொக்கிஷம் போல் உள்ளது. ஒன்று வேண்டும். மற்றது வேண்டாம் என்று சொல்ல முடியாது. இரண்டும் நமக்கு வேண்டும்.

இந்தக்காலத்தில் சாஸ்திரத்திலுள்ள பெயர்களைக்கூட எத்தனைபேர் தெரிந்து கொள்ளாதவர்களாக இருந்கின்றுர்கள் இது வருந்தக்கூடியது.

சைவபரிபாலன சபையின் 80 ஆண்டு பணிபற்றி திரு. நமசிவப்பிரகாசம் பேசினுர்.

---

'மகாவலியை வடக்கேதிருப்ப

## அணைக்கட்டு வேலைகள் இவ்வருடம் ஆரம்பமாகும்"

### — அமைச்சர் ஹுருளே

சாவகச்சேரி, சனி

போக்குவரத்து அமைச்சர் திரு. ஹுருளே நேற்றுகாலை சாவகச்சேரி புகையிரத நிலையத்திற்கு வந்தபோதுபுகையிரத நிலைய அதிபர் திரு. மகாதேவா அவரை வரவேற்ருர். அமைச்சருடன் சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினமும் வந்திருந்தார்.

சாவகச்சேரி பிரயாணிகள் சங்கத் தலைவரினுல்அளிக்கப்பட்டமகஜரொன்றுக்கு பதிலளிக்கையில், கொழும்பு திரும்பியதும் மகஜரில் குறிப்பிட்ட கோரிக்கைகள்பற்றி தாம் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார்.

களை ஒற்றுமைப்படுத்த முடியுமென்பதை பிரதமர் டட்லி சேனநாயகா 1965-ம் ஆண்டில் செயலளவில காட்டிவிட்டார். இறககுமதிசெய்யப்பட்ட பால்மா, உருளைக் கிழங்கு என்பனவற்றின் இறககுமதி தடைசெய்யப்பட்ட பின், இலங்கையில் அவற்றின்உற்பத்தியை அதிகரித்திருக்கிறோம் என்று குறிப்பிட்டு மஸ்கேலியாவில இயங்கும் மின்சகதியை வடபகுதிககு விஸ்தரிகக நடவடிககை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், மகாவலி கங்கையை வடபகுதிககுத் திருப்பும் திட்டத்துககு இவ்வருடம் பணம் ஒதுக்கப்படவுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாடு அமைச்சர்கள் இனிமேல் கலந்து கொள்ள மாட்டார்கள்.

நாட்டில்வறட்சி ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் குடிக்கதண்ணீ கிடைக்காமல் கஷ்டப்படும் போது மந்திரிகளுக்கு என்ன விருந்து வேண்டிக்கிடக்கிறது என்று அவர்கள் கருதுகிருர்கள்.

தமிழ் நாட்டு முதல் அமைச்சர் சமீபத்தில் தமக்கு அளிக்கப்பட்ட ஒரு தேநீர் விருந்தின் போது இதுபற்றி சுருக்கமாக குறிப்பிட்டார்.

...ச்சர் கருணாநிதி கலந்து கொண்டார்.

பின்னர் அவர் அங்குள்ள ஒழுங்குமுறை சந்தையைப் பார்வையிட்டார். அடுத்து அவருக்கு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. அதற்குப் பதில் அளித்த கருணாநிதி பேசுகையில்:

இன்றைக்கு நாட்டில் உள்ள வறட்சி நிலைமையில் இதுபோன்ற தேநீர் விருந்துகள்தேவையில்லையென்றே கருதுகிறேன். இன்றுள்ள ...ல்லை எனத் தீர்மானித்திருக்கிறேன். என்ருர்.

இன்று முதல் வறட்சி நிலை மாறும் வரை இது போன்ற தேநீர் விருந்துகளில் எந்த அமைச்சர்களும் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். என்று திரு. கருணாநிதி அறிவித்தார்.

அடுத்து பர்மா அகதிகளுக்கான அண்ணு குடியிருப்பை திறந்து வைத்தார்.

...பெறுகிறது. சம்யுத்த சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இந்திரகுமார் எம். எல். சி., ச. சோ. கட்சி ஊழியர் ராமேஸ்வர் பிரசாத் சிங், பாட்ஞு பல்கலைக்கழக மாணவர் ஜதுநந்தன் திரிபாதி ஆகியவர்கள் சாட்சியமளித்தனர்.

வழக்கு தொடுத்துள்ள சிவானந்த திவாரி கோர்ட்டிற்கு வந்திருந்தார். பூரி சங்கராச் சாரியார் சார்பில் பாட்ஞு நகர காப்பரேஷன் முன்னுள் மேயரும். வக்கீலு... ஆகியவற்றின் கீழ் இவ்வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மத்திய உணவு மந்திரி ஜெகஜீவன்ராம், முன்னுள் காங்கிரஸ் தலைவர் டி. சஞ்சீவையா, பார்லிமெண்ட் அங்கத்தினர்கள்மதுலிமாயி, ஜார்ஜ்பெர்ஞண்டஸ், ராபிராய் ஆகியவர்களையும், சில பத்திரிகை நிருபர்களையும் சாட்சி அளிப்பதற்காக அழைக்க வேண்டும் என்று சிவானந்த திவாரிகேட்டுக் கொண்டிருக்கிருர்.

...தேசபிதா காந்திஜியின் இறுதி விருப்பத்திற்கிணங்க காங்கிரஸ் கட்சியை பரீதாபாத் மகாநாட்டில் கலைத்து விடவேண்டுமென்றுகோரும் உத்தியோக சார்பற்ற ஒரு தீர்மானத்தை அனுப்பிய பிறகுஜகதீஸயகொடேசியா என்ற அ. இ. கா. க. அங்கத்தவர் தமது தலையை மொட்டைஅடித்துக்கொண்டார்.

காங்கிரசில் சில தலைவர்கள் வலதுசாரி, இடதுசாரி ...ட்சிகளுடன் கூட்டுச்சேர முயற்சிப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும்வகையில் ராஜகட்டத்தில் சில நண்பர்கள், பார்வையாளர்கள் முன்னிலையில் அவர் தமது தலையை மொட்டை அடித்துக் கொண்டார். பிறகட்சிகளுடன் கூட்டு சேர்தலால், காங்கிரஸ் கட்சி தனது கொள்கைகளை இழந்துவிடுமென்று அவர் கருதுகிருர்.

...க்கப்பட்டமகஜரொன்றுக்கு பதிலளிக்கையில், கொழும்பு திரும்பியதும் மகஜரில் குறிப்பிட்ட கோரிக்கைகள்பற்றி தாம் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார்.

மீசாலை குடிசைக் கைத்தொழில் நிலையத்தில் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. சு. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றுகையில், ''அரசியலால் மக்... நடவடிககை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், மகாவலி கங்கையை வடபகுதிககுத் திருப்பும் திட்டத்துககு இவ்வருடம் பணம் ஒதுக்கப்படவுள்ளதென்றும், அணைக்கட்டு வேலைகள் இவ்வருட இறுதியில் ஆரம்பமாகுமென்றும் கூறினர்.

சாவகச்சேரிஆட்சிமன்ற உறுப்பினரும் இக்கூட்டத்தில் பேசினர்.

# நெடுஞ்செழியன் போட்டி மேலிடத்துக்கு தலையிடி

## சமரச முயற்சி நடக்கிறதாம்

சென்னை, ஏப். 26

தமிழ்நாடு தி. மு. கழக பொதுச் செயலாளர் பதவிக்கு முன்னுள் அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிருர் அல்லவா. ஏற்கனவே திரு. கருணாநிதி இப்பதவியை ஏற்றுக்கொள்ளும்படி நெடுஞ்செழியனிடம் கேட்ட பொழுது அதற்கு அவர் மறுத்து விட்டாராம். ஆனல் இப்பொழுது அவர் போட்டியிடப் போவதாக அறிவித்திருப்பது கட்சி மேலிடத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

இதனல் கட்சியில் வேற்றுமைகள் விரிசலாக மாறிவிடக் கூடாதென்பதற்காக ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் பிரமுகர்களுக்கும் திரு. நெடுஞ்செழியன் ஆதரவாளர்களுக்குமிடையில் சமரசம் ஏற்படுத்த செல்வாக்குள்ள சிலர் முனைந்திருப்பதாக அறியப்படுகின்றது.

பொதுச் செயலாளர் பதவிக்கு திரு. நெடுஞ்செழியன் போட்டியிடப் போவதாக அறிவித்திருப்பது பற்றி திரு. கருணுதியிடம் நிருபர்கள் கேட்ட பொழுது அவர் பட்டுக் கொள்ளாமல் பதிலளித்தார்.

முதல் அமைச்சர் தேர்தல் நடந்த போது சட்டசபை உறுப்பினர்கள் வற்புறுத்தியதால் பதவியை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்போது நெடுஞ்செழியனிடம், ''பொதுச் செயலாளராக வாருங்கள் என்பெயரை முன் மொழியுங்கள்'' என்றேன். அவர் பொதுச் செயலாளர் ஆகவோ என்பெயரை முன்மொழியவோ சம்மதிக்கவில்லை. பலமுறை கேட்டும் உடன்படவில்லை. இந்தநிலையில் பொதுக்குழுதான் முடிவு எடுக்க வேண்டும். என்ருர் திரு. கருணாநிதி.

நிருபர்கள் கேட்ட பின்வரும் கேள்விகளுக்கு முதலமைச்சர் அளித்த விளக்கம் இங்கே தரப்படுகின்றது.

கேள்வி: என். சி. சி யில் ஆங்கில கட்டளைச் சொற்களை தமிழக அரசு பயன்படுத்துவதை டெல்லி சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கிறதே?

கருணாநிதி: நான் டெல்லி சென்றபோது பிரதமருடன் இதுபற்றி பேசினேன். அவர்கள் சொல்லியிருக்கும் திட்டம்பற்றி ஆலோசித்து வருகிருேம்.

கேள்வி: நகரசபை தேர்தல் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில் தமிழ் நாட்டில்தற்போது 7 நகரசபைகள் தி, மு க. கையில் இருக்கின்றன. எவ்வளவி அதிகமாக கிடைக்கிறதோ அதுவே பெரிய வெற்றி. தேர்தல் அமைதியாக நடக்கபோதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. இப்போது நடக்கும் நகரசபைத் தேர்தலைத் தவிர எஞ்சியுள்ள 11 நகரசபைகளுக்கு பின்னர் தேர்தல் நடக்க இருக்கிறது. தற்போது நடக்கஇருக்கும் நகரசபை தேர்தல் முடிவுகளின் அடிப்படையில்அந்தந்தக் கட்சிகளின் படிப்பினையைப் பொறுத்து பின்னர் நடக்க இருக்கும் தேர்தல்களில் கூட்டணியின் நிலைமை இருக்கும்.

நகரசபை துப்புதவு பிரிவில் பணி புரியும் சிப்பந்திகளுக்கு ஓய்வுகாலபென்சன் அளிக்கும் திட்டம் பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

மாநிலங்களுக்கு டெல்லியிடம் இருந்து அதிக அதிகாரங்களை பெறுவது சம்பந்தமாக பரிசீலிக்கஅடுத்த மாத இறுதிக்குள் ஒரு உயர் கமிட்டி அமைக்கப்படும். எந்த எந்த அதிகாரங்களை டெல்லியிடம் இருந்துபெறலாம். என்பது பற்றி இந்த கமிட்டி சிபார்சு செய்யும். இந்தக் கமிட்டியில் சட்டத்துறை வல்லுனர்கள் உயர் கல்வியாளர்கள் நீண்ட அரசியல் அனுபவம் உள்ளவர்கள் இடம் பெறுவார்கள்.

கேள்வி: வரட்சிக்குப் பிரதமர் இந்திரா ரூபா 2கோடி கொடுத்துவிட்டு இதுபற்றி கமிட்டி சிபார்சு செய்ததைவிட அதிகம்தான்கொடுத்து இருக்கிருேம் என்று கூறி இருக்கிருரே?

பதில்: அவர் அப்படி கூறியதாக பத்திரிகையில் தான் படித்தேன். அவர் அப்படி கூறியிருந்தாராணுல் அது அபத்தமானதுஆகும்.

கேள்வி: லாட்டரி விற்பனையை அதிகரிக்க பரிசுத் தொகை உயர்த்தப்படுமா?

பதில் அந்த மாதிரி உத்தேசம் இல்லை.

பொருளாளர் பதவியை ஏற்கமாட்டேன் என்று எம். ஜி. ஆர் கூறி இருக்கிருர!

பதில்: நான் பொருளாளர் பதவி பற்றி அவரிடம் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. கலைத்துறையில் உள்ள ஒருவர் வருவார் என்றுதான் கூறினேன், அது நாஞகவும் இருக்கலாம் அல்லவா?

இவ்வாறு கருணாநிதி கூறிஞர்.

## சர்வதேச முயற்சிகள் பயனளிக்க வில்லையே

### யுதாண்ட் கவலை

லண்டன், ஏப். 26

உலகின் பிரதான பிரச்னைகளை சர்வதேச முயற்சிகளில் கட்டுப்படுத்தமுடியாமல் போய்விடும் போலிருக்கிறதென்று யுதாண்ட் கவலை தெரிவித்துள்ளார்.

லண்டனில் ஒரு கூட்டத்தில் பேசுகையிலேயே யுதாண்ட் இந்தக்கவலையைவெளியிட்டார்.

மேற்காஸிய, வியட்னும் போன்ற பிரதான உலகப் பிரச்னைகள் பற்றி யுதாண்ட் குறிப்பிட்டார். உலகப் பிரச்னைகளின் தீர்வுக்கு சீஞவுடன் தொடர்பின்மையும் பெரிய முட்டுக்கட்டையாக விருந்து வருகின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

## துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரி டிரிபேக் கல்லூரியில் 23 வருடங்களுக்கு மேல் ஆசிரியராகவும் அதிபராகம் கடமையாற்றிய திரு. ஜே. வி. தம்பிநாயகத்தின் மறைவு குறித்து டிரிபேக் கல்லூரியில் அஞ்சலி செலுத்தப்பட்டது. கல்லூரி வாயலில் கறுப்புக்கொடி கட்டி துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

மறைந்த திரு. ஜே. வி. தம்பிநாயகம் இறக்கும் வரை டிரிபேக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது.

## 'சியவச' திருட்டு

அளவெட்டி. சனி

கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலய அதிபர் திரு. கந்தையா வீட்டில் கூரையைப்பிரித்துஉள்ளே சென்ற இனந்தெரியாதசிலர் 90 சியவசசுவீப்டிக்கட்டுகளையும் 27 ரூபாய் ரொக்கப் பணத்தையும் களவாடியுள்ளதாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## தர்ம உபதேசம்

புத்தூர், சனி

வாரந்தோறும் போயா தினங்களில் மாலை 6 மணி தொடக்கம் இரு மணி நேரம் பரமேஸ்வரா ஆலயத்தில் கல்லூரி அதிபர் மு. ஞானப்பிரகாசம் தலைமையில் தர்ம உபதேசங்கள் நடைபெற்றுவருகின்றன. ஏப்ரல் 28ம்-திகதி நடைபெறும் அடுத்த நிகழ்ச்சியாக கந்தபுராணத்தில் கூறப்பட்ட தர்மம் சார்பான உபதேசம் நடைபெறும்.

## இணக்க சபையின் சேவைக்கு பாராட்டு

கோப்பாய், சனி

கோப்பாய்ப்பகுதி இணக்க சபை வாரந்தோறும் போயா தினங்களில் கோப்பாய் நாவலர் பாடசாலை மண்டபத்தில் கூடி வழக்கு விசாரணைகளை நடாத்திவருகிறது புரக்டர் திரு. வ. முத்துக்குமாரசாமி தலைமையில் இயங்கும் இச்சபை ஆரம்பகாலத்திலிருந்து இது வரை சுமார் 100 வழக்குகளைச் சமரசமாகத் தீர்த்து வைத்துள்ளதாம். இதன் சேவைக்குக் கோப்பாப் பகுதியைச் சேர்ந்த பிரமுகர்கள் பலர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

## புனருத்தாரணம்

கோப்பாய், சனி

கோப்பாய் நாவலடி முத்துமாரியம்மன் ஆலயப் புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. தற்போது வெள்ளிக்கிழமை தோறும் இந்த ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

## மீண்டும் நியமனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி நிர்வாகசபை அங்கத்தவராக திரு. எம். பூபாலசிங்கம் மேலும் இரண்டு வருஷங்களுக்குக் கடமையாற்றுமாறு சுகாதார அமைச்சரினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

## யாழ். புகையிரத நிலையத்தைப் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்குற்கு விஜயம் செய்த அமைச்சர் திரு. ஹுருளே புகையிரத நிலையத்தைச் சுற்றிப் பார்வையிட்டார். நாடுபூராவுமுள்ள புயிரத நிலையங்கள் மீது தாம் ஒரே விதமான, பாரபட்சமற்ற நடவடிக்கையே மேற்கொண்டுவருவதாகத் தெரிவித்த அவர், நிதிநிலைமையைப் பொறுத்தே புகையிரத நிலையங்கள் சீரடைந்து வருவதாகத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை புகையிரதமூலம் அமைச்சர் கொழும்பு திரும்பினர்.

(கா. நி)

## மகா கும்பாபிஷேகம்

அல்லைப்பிட்டி, சனி

வேலணை தெற்கு சிவசுப்பிரமணியர் ஆலயத்தில்மகா கும்பாபிஷேக விழா இம்மாதம் 30-ம் திகதி தொடக்கம் நடைபெறவிருக்கின்றது. இவ்விழா நயினதீவு பிரமஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறும், அன்று மகேசுரபூசையும் நடைபெறும்.

## 'யு. என். பி. அரசாங்கம் மக்களின் உரிமைகளை பறிக்கிறதாம்

### கம்யூனிஸ்ட் (சீனசார்புக்) கட்சி அறிக்கை

நல்லூர், சனி

'மே தினத்தை முதல் திகதி கொண்டாடுவதற்கு அனுமதியளிப்பது பற்றி ஆராய்ந்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும், பொலிஸ் அதிபரும் மீண்டும் அதை மறுத்துவிட்டனர். ஆனல் எங்களைப் பொறுத்த வரையில் இந்நாட்டுத் தொழிலாளர் வர்க்கம்தமது உரிமைகளை நிலைநிறுத்த உறுதிபூண்டுள்ளது.'

சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கே. ஏ. சுப்பிரமணியம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யு. என். பி. அரசாங்கம் எதேச்சாதிகாரமாகவும், சர்வாதிகாரமாகவும் இந்நாட்டு மக்களின் உரிமைகளை ஒவ்வொன்ருகப் பறித்து எடுப்பதுடன் கொடூரமான சட்டங்களையும் போட்டு மக்களை அடக்கப்பார்க்கிறது என்று கூறியுள்ள அவர் மேலும் தெரிவிப்பதாவது:

பத்திரிகை பேச்சுச் சுதந்திரம் பற்றி அதிகம் பேசிய ஜனநாயக வாதியான டட்லி சேனநாயகாவின் அரசாங்கமும் அவருடைய அதிகாரமும் தொழிலாளி வர்க்கத்தைப் பொறுத்த வரையில் பயன்தரக்கூடியதல்ல. இதை தொழிலாளர்களின் ஒன்றுபட்ட உறுதியான போராட்டம்தான் வழிவகுக்கும் என்பதில் எங்களுக்கு உறுதியான நம்பிக்கை உண்டு.

# வைத்திய மாணவர்க்கு வேண்டும் தகைமைகள்

அல்லைப்பிட்டி, சனி

''வைத்திய மாணவர்கள் எதிலும் உற்சாகமுடையவர்களாயும், தன்னம்பிக்கையும் மனத்தைரியமுடையவர்களாகவும், கடவுளிடம் நம்பிக்கையுடையவர்களாகவும் இருக்கவேண்டும். அப்போதுதான் நோயாளர்களை நன்ருகக் கவனிக்க முடியும். அவர்களது நோய்களையும் எளிதில் குணப்படுத்த முடியும். மனத்தைரியமற்றவர்கள் வைத்தியத் தொழிலுக்கு உகந்தவர்களல்ல'' என யாழ்ப்பாணம் இலங்கா ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி இறுதிவருட மாணவர்களது பரீட்சைகள் முடிவடைந்தபின் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போது முகாந்திரம் ஈ. பி. இராசையா குறிப்பிட்டார். இக்கூட்டத்தில் கொழும்பிலிருந்து பரீட்சை நடத்த வந்த அதிகாரிகள் பெர்ஞன்டோ, குணரத்தினம் ஆகியோருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. கல்லூரி அதிபர் டாக்டர் ஜே. [illegible] இரத்தினம் மற்றும் ஏ. [illegible]. இராஜரத்தினம், எம். [illegible]. சுந்தரம் உட்படப் பலர் பேசினர்

## பொருட் காட்சி

அல்லைப்பிட்டி, சனி

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் அடுத்த மாதம் 8, 9, 10-ம் திகதிகளில் கலை, விஞ்ஞானம், விவசாயம், கைத்தொழில் சம்பந்தமான பொருட் காட்சி ஒன்று நடைபெற இருக்கின்றது. இதற்கான வேலைகளை மேற்படி கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் ஒழுங்குசெய்து வருகிருர்கள். இக்காட்சியில் கலை, விஞ்ஞானம் சம்பந்தமான கலை நிகழ்ச்சிகளும் நடைபெற இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உளவளத்துக்குக் கல்வி புகட்டுவதுதான் மணி தாபிமானச் சங்கங்களின் உரிய அலுவல்.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் சித்திரை மாதம் 15-ந் திகதி (27-4-69)


## நடவடிக்கை வேண்டும்

'வெந்த வீட்டில் பிடுங்கியது அறுதி' என்ற மனப்பான்மை கொண்டவர்கள் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளத் தயாராகிவிட்டார்கள்! 'காற்றுள்ளபோது மட்டுமல்ல, காற்றையே அதாவது வகுப்புவாதக் காற்றையே உருவாக்கி அதில் தூற்றத் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள்- இதற்கு "'வீடு கொழுத்தும் இராசாவுக்கு நெருப்பு எடுத்துக்கொடுக்கும்'' மந்திரி போல பொறுப்புள்ள சிலரும் பொறுப்புள்ள சில பத்திரிகைளும வகுப்புவாதத்துக்கு தூபம் போடுகின்றனர். இவர்கள் விஷயத்தில் அரசாங்கம் கவனத்தைத் திருப்பவேண்டும். இதே சமயம் அடுத்ததேர்தலில் அரசியல் இலாபம் தேட வகுப்புவாதத்தை உயிர்நாடியாகக் கொள்ள முயல்வோர் அவர்கள் மூலம் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள காத்திருக்கும் சமூக விரோத சக்திகள் விஷயத்தில் இந்நாட்டில் வாழும் மக்கள் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும்.

1958-ம் ஆண்டில் நாடு கண்டறிந்த அந்த இருள் சூழ்ந்த நாட்களை மறந்து மீண்டும் இங்கு வகுப்புவாத ஆபத்து தலைதூக்குகிறதென்பதை இதேபத்தியில் சென்ற சிலதினங்களுக்கு முன்னரும் சுட்டிக்காட்டியிருந்தோம். தேர்தல் காலம் நெருங்க நெருங்க நிலைமை மோசமடைந்துவருகிறதேயன்றி சீராகும் அறிகுறியைக் காணோம். வகுப்புவாதம் எங்கிருந்துவந்தாலும் அது சிறுபான்மையினரிடமிருந்து வந்தாலும்சரி பெரும்பான்மையினரிடமிருந்து வந்தாலும் சரி வகுப்புவாதம் வகுப்புவாதம்தான். அது நாட்டுக்கே அழிவைக் கொடுக்கும் ...

... ளும் அமைதியாக ஐக்கியமாக வாழ்ந்துவருகிறார்கள். ஒற்றுமையாக வாழவே அவர்கள் விரும்புகிறார்கள்,

1958-ம் வருடத்திய துரதிர்ஷ்ட சமயத்தில் பல தமிழர்களை, சிங்கள மக்கள் பலர் தமது உயிருக்கு ஆபத்து நேர்ந்த போதும் காப்பாற்றியதை மறந்துவிட முடியாது. இதேபோல், தமிழ்ப் பகுதிகளிலும் 'எதிரொலி' கிளம்பிய போது சிங்களமக்கள் எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவிடாததுடன் சிறுகாயம் கூட ஏற்படாமல் தமிழ் மக்கள் பலர் காப்பாற்றியதையும் மறக்கமுடியாது. ஆனால் அந்த துரதிர்ஷ்ட சம்பவங்களுக்கு காரணமாக இருந்த சக்திகள் மீண்டும் தலைதூக்கத்தொடங்கியிருக்கின்றன. தம்மைத் தேசியப் பத்திரிகைகள் என்று சொல்லிக்கொள்ளும் பொறுப்புள்ள சில பத்திரிகைகள் பொறுப்பற்ற முறையில் வகுப்பு துவேஷத்தை தூண்டிவிடக் கூடியதாக விஷமத்தனமான செய்திகளை பிரசுரிப்பதுடன் கருத்துக்களையும் வெளியிடுகின்றன. அடுத்த தேர்தலில் வகுப்பு வாதம் தலைதூக்காமலும் தேர்தல் பிரசாரத்தை கண்ணியமான கட்டுப்பாடான முறையில் நடத்துவதற்கு அரசியல்கட்சிகளும், அரசியல் வாதிகளும் தமக்குள் "நெறிமுறைக் கோட்பாடு'' ஒன்றை வகுத்துக்கொள்ள அரசியல் தலைவர்களின்மகாநாடு ஒன்றைப் பிரதமர் கூட்டி வழிகாணலாம். இதே சமயம் பத்திரிகையாளர்களையும் பிரதமர் அடிக்கடி அழைத்துப்பேசி துவேஷத்தைத் தூண்டி நாட்டின் அமைதியைக் கெடுக்கக்கூடிய முறையில் செய்திகளையும் கருத்துக்களையும் வெளியிடாமல் பத்திரிகையாளர்களே தாமே 'தணிக்கை' செய்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை ...

# ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது வாக்காளன் பொறுப்பு

"வாக்காளர்கள் விஷயம் தெரிந்தவர்களாகவும், நேர்வழியில் நடக்கிறவர்களாகவும் மாறும் போதுதான் நாடும் ஜனநாயகமும் காப்பாற்றப்படும், மேலும் வாக்காளர்கள் ஜாதி, மதம், சுயநலம் ஆகியவற்றைக் காட்டிலும் தேசத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.'' இவ்வாறு ஆச்சார்யா ஜே. பி. கிருபளானி இந்தக்கட்டுரையில் விளக்குகிறார். இந்தச் சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்து ஆசார்யா கிருபளானி எழுதியுள்ள இந்தக் கட்டுரைவிரைவில் பொதுத் தேர்தலை எதிர்நோக்கும் நம் நாட்டுவக்காளர்களினது சிந்தனையைத் தூண்ட உதவும் என்பதால் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

'சுதேசி' சம்பந்தமான எண்ணங்களைக் கருத்தில் கொண்டுதான் காந்தியடிகள் தனது நிர்மாணத் திட்டங்களை வகுத்தார். அத்திட்டங்களுக்கு ராட்டையையே நடுநாயகமாக வைத்தார். ராட்டையை சூரியனாகவும் மற்ற நிர்மாணத் திட்டங்களை அதைச் சுற்றி இயங்கும் நட்சத்திரங்களாகவும் கருதினார். காந்தியடிகள் ஒருசமயம் சட்டசபை பசிஷ்காரத்தைப் பற்றிக் கூறினார். ஆனால் ஆட்சியை ஏற்பதன் மூலம் மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்று அவருக்கு தோன்றிய போது மாநிலங்களில் மந்திரிசபை அமைக்குமாறு காங்கிரசிற்கு ஆலோசனை கூறினார். அப்போதிருந்த ஆட்சியில் காங்கிரஸ் தனது அதிகாரத்தை முழுதும் பயன்படுத்த முடியாது என்பதையும் அறிந்திருந்தார். அமைச்சர்கள் பொதுமக்களின் தர்மகர்த்தாக்களாக இருக்கவேண்டும் தேசத்திலுள்ள பொதுமக்களை கருத்தில் கொண்டு எளிய வாழ்வு நடத்த வேண்டும் என விரும்பினார்.

சுதந்திரத்திற்குப் பின்னர் பொதுமக்களின் பொருளாதார நிலை சீர்திருந்தவில்லை. ஆகையால் சுதந்திரத்திற்கு முன்னர் காங்கிரசும் அதன் மூலம் தேசமும் கையாண்டு வந்த கொள்கைக்கே திரும்பி செல்லும்படி காந்தியடிகள் கூறிவந்தார்.

நமது பொருளாதார நோயை குணமாக்குவதற்கு நாடுப் அரசும் முடிந்தளவு சிக்கனத்தைக் கையாள வேண்டும் என ஆலோசனை கூறினார். வீணை ஆடம்பரச் செலவை நிறுத்தி விடும்படி ஆலோசனை கூறினார். ராஷ்டிரபதி கவர்னர் ஆகியோர்கள் எளிய வாழ்வு நடத்தவேண்டும். ஆங்கிலேயர் காலத்திலிருந்த ஆடரம்பரச் செலவை அடியோடு நிறுத்திவிட வேண்டுமெனக் கூறினர்.

காந்தியடிகளிருந்திருந்தால் இவ்வளவு பெரிய தொகைகளை அந்நிய நாடுகளிடமிருந்து கடன் வாங்கவும் விட்டிருக்கமாட்டார். பூர்த்தி செய்யப்படும் என்பது அவருடைய எண்ணம் இன்றுள்ள உணவுப் பற்றுக்குறைக்கு காரணம் சரியாக விநியோகிக்கப்படாததே என்பது எனது எண்ணமாகும்.

அரசியல் துறையைப் பொறுத்தமட்டில் காந்தியடிகளிருந்திருந்தால் தமது வாக்காளப் பெருமக்களுக்கு பயிற்சியளிப்பதில் தனது சக்தி முழுவதையும் ஈடுபடுத்தியிருப்பார். அவரது நிர்மாணத் திட்டங்களில் இதுவும் ஒன்றாக இருந்தது. இன்று ஜாதி, மதம், மொழி ஆகியவற்றின் பெயரால் மக்கள் மயக்கப்படுகிறார்கள். காந்தியடிகள் இதை முற்றிலும் எதிர்த்திருப்பார் தேர்தலை கருத்தில்கொண்டு

**— ஆச்சார்ய கிருபளானி —**

தங்களது சக்திக்கு மீறிய செலவு செய்யவும் கூறியிருக்கமாட்டார். உணவுப் பற்றுக்குறையுள்ளஇந்த நெருக்கடியான காலத்தில் சுயகட்டுப்பாட்டைப்பற்றி கூறியிருப்பார். ஏனெனில் இயற்கையன்னை மக்களின் தேவைக்கு போதியளவு உற்பத்தி செய்கிறாள்; சுயநலம் மேலிட்டு சிலர்தேவைக்கு அதிகமாக சேர்த்து வைக்கவில்லையெனிலோ, தவறான வழிகளில் அவற்றை உபயோகப்படுத்தவில்லையெனிலோ மக்களின் தேவை தவறான வழிகளில் பொருள் ஈட்டப்படுகிறது. பின்னர் அத்தொகை ஒட்டுவாங்குவதற்காக கண்மூடித்தனமாக செலவு செய்யப்படுகிறது. அரசாங்க இயந்திரமும் தவறான வழிகளில் பயன்படுத்தப்படுகிறது. இதைக் காந்தியடிகளிருந்தால் சகித்துக்கொண்டிருக்கமாட்டார். வாக்காளர்கள் விஷயம் தெரிந்தவர்களாகவும், நேர்வழியில் நடப்பவர்களாகவும் மாறும்போதுதான் நாடும் ஜனநாயகமும் காப்பாற்றப்படும். அத்துடன் அவர்கள் ஜாதி, மதம், சுயநலம் ஆகியவற்றைக் காட்டிலும் தேசத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும்.

காந்தியடிகள் சர்வதேசப் பிரச்னைகளில் ஆரவம் காட்டினார் என்றாலும் மனிதன் முதலில் தனது வீட்டைச் சரியாகப் பராமரிக்கவேண்டும் என்பது அவரது எண்ணம், வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் 'உங்களது கருத்தைப் பரப்புவதற்கு வெளியில் வாய்ப்பிருக்கிறது. நிறுவனப்பணிகளுக்குப் பணமும் போதிய அளவு கிடைக்கும் என்று காந்தியடிகளிடம் கூறியபோதெல்லாம் பாரதத்தில் ஏதாவது செய்துகாட்டவேண்டும் என்றுதான் பதிலளித்து வந்தார் சீர்திருந்திய பாரதம் உலகிற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என எண்ணிக்கொண்டிருந்தார். தனிமனிதன் குடும்பத்திற்காகவும், குடும்பம் கிராமத்திற்காகவும், கிராமம் மாவட்டத்திற்காகவும், மாவட்டம் மாநிலத்திற்காகவும், மாநிலம் நாட்டிற்காகவும் தியாகம் செய்வதைப் போன்று நாடும் உலக நன்மைக்காக தன்னை அர்ப்பணிக்கவேண்டும் என அடிக்கடி கூறிவந்தார் அவர். ஐக்கிய நாடுகளின் சபை நன்றாக வளர்ச்சியடைந்து பயன்படவேண்டும் என விரும்பினார். ஆனால் சக்தியுள்ள அரசியல் வாதிகளின் உள்ளமும், அறிவும் உலக நிறுவனத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவரை இத்தகைய நிறுவனங்கள் பயனுள்ள பணியைச் செய்ய இயலாதுஎனக் கூறிவந்தார். உள்ளம் மாறாத வெறும் நிறுவன அமைப்பிற்கு காந்தியடிகள் மதிப்பளிக்கவில்லை.

## ஐயாறன் எழுதுவது

கோண்டாவில் பிள்ளையார் கோயில் தண்டிகைத் திருவிழாவிலே நடைபெற்ற வில்லிசை அரங்கேற்றத்துக்குச் சென்றிருந்தேன். கிராமியக் கலையான வில்லுப் பாட்டை முதல் முதல் கொழும்புக் கோயிலில்தான் கேட்டேன். திருவாவடுதுறை ஆதீன வித்வான் வில்லிசைப் புலவர் சாத்தூர் டாக்டர் பிச்சைக்குட்டியார் கேட்போர் மனம் உருகும்படி செய்த வில்லிசைக் கச்சேரியை வருடங்கள் பலவாகியும் என்னால் மறக்க முடியாமலுள்ளது.

வரவர அவரது புகழ் பெருகிவருகிறது. திருச்சி வானொலியில் மாதாமாதம் மகாத்மா காந்தி கதையை நன்குசெய்து மக்களிடையே மகாத்மாவின் மேலான நெறிகளைப் பரப்பிவருவதைக் கேட்டு மகிழ்ந்தேன். இந்தக் கலைக்குத் தனியாகச் சில இலட்சணங்களுண்டு. கர்நாடக, சினிமா இசை கலக்காமல் சந்தத்தமிழிலே சிந்து முதலியன மூலம் கதையை இசையுடனே உணர்ச்சி ததும்பத் தாளவாத்தியங்களுடன் கூறுவது கிராம மக்களை மட்டுமன்றி நகரவாசிகளின் மனதையும் கவர்ந்து விடுவதைப் பார்த்தேன்.

சமீப வருடங்களில் இந்தக் கலை ஆர்வம் இலங்கையில் சிலருக்கு ஏற்பட்டுள்ளது, வரவேற்கத்தக்கது. ஆனால் தக்க குருவின்றி, தங்கள் சொந்த முயற்சியிலேயே இதில் பலர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆனால் வேலணையைச் சேர்ந்த சபா. சதாசிவம் அவர்கள், அரசாங்கத்தில் வேலைபார்த்துக்கொண்டே, தமிழகம் சென்று, டாக்டர் பிச்சைக்குட்டியாரைக் குருவாகக் கொண்டு, இரண்டு மாதம் அவருடன் இருந்து, இக்கலையைக் கற்று, மதுரை ஆதீனத்தின் திருமுன்பு, அரங்கேற்றம் நடத்தி ஆசிபெற்றுத் திரும்பி, அன்று கோண்டாவில் கோயிலிலே மேலான பக்கவாத்தியங்களுடன் அரங்கேற்றம் செய்தார். நேரம் போதாவிடினும், பிட்டுக்கு மண் சுமந்த கதையை, குழந்தைகளும் ரஸிக்கும்படி வில்லிசைக் கச்சேரியாகச் செய்தார். சிற்சில இடங்களில் பிச்சைக்குட்டியார் பாடுவது போலவே இருந்தது. இக்கலைக்குரிய லட்சணத்துடனே, குருவருள்பெற்று இவர் நடத்திய கச்சேரியிலே இடையில் எழுந்துவர மனமேயில்லை. கடைசிவரை இருந்து கேட்டேன். தக்க பக்கவாத்தியங்களின் உதவியைப் பெற்றுள்ள இந்த இளம் பண்பாளருக்கு நல்ல எதிர்காலம் காத்துள்ளதென்பதில் ஐயமில்லை. வில்லிசை வைத்ததால் இத்திருவிழாவுக்குச் சென்ற வருடத்தைவிட அதிக கூட்டமாம்.

தமது குருநாதரான டாக்டர் பிச்சைக்குட்டியார் சில மாதங்களில் இங்கு வந்து வில்லிசைக் கச்சேரி நடத்தப் போவதாக அறிவித்தார். விஸா தேவதைகள் வழிவிடவேண்டும்.

0 0 0

கொழும்பிலே, ஓர் அமைச்சரிடமிருந்து அழைப்புக் கடிதம் நேற்று கிடைத்தது. ஒரு பக்கத்தில் எல்லாம் சிங்களம். மறுபக்கத்தில் தமிழும், ஆங்கிலமும் சர்வதேச தொழில் நிறுவனத்தின் 30-ம் ஆண்டு ஞாபகமாக விசேஷ முத்திரைகளை பிரதமர் வெளியிடப் போகிறாராம். அழைப்பு யாருக்கென்று சிங்களத்தில் மட்டும் எழுதியிருந்தனர். தமிழிலோ, ஆங்கிலத்திலோ ஒன்றும் குறிப்பிடவில்லை. சிங்களம் தெரியாதது என்குறையே. என்றாலும் மூன்று மொழியிலும் அழைப்பை அச்சடித்தவர்கள் மூன்றிலும் பெயரை எழுதினால் நல்லதல்லவா?

இனியாவது இவ்வித குறைக்கு இடமில்லாமல் அரசாங்கம் பார்த்துக் கொள்ளுமா?

0 0 0

நிலைமை சொல்லு நெஞ்சே தவமென் செய்தாய், கலைகள் ஆயவல்லான் கயிலாய நன் மலையன் மாமயிலாடு துறையன் நம் மலையின் மேலும் மனத்துளுந் தங்கவே.

— அப்பர் அடிகள்

## திருமலைச் செய்திகள்

நமது நிருபர்

"நீர்வழங்குக"

மரணவிசாரணை அதிகாரி இல்லாததால்

# 20 மணி நேரமாகச்சடலம் சவச்சாலையில் கிடந்தது

## மாஜிஸ்டிரேட் விசாரணை நடத்தினர்

## செய்திச் சுருக்கம்

விஞ்ஞான விரிவுரையாளர்

ஏற்பட்டுள்ள இடங்களில் உள்ள சிற்றூறுகள் யாவும் பெருக்கெடுத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் அது சிறுபான்மையின ரிடமிருந்து வந்தாலும்சரி பெரும்பான்மையின ரிடமிருந்து வந்தாலும் சரி வகுப்பு வாதம் வகுப்பு வாதம்தான். அது நாட்டுக்கே அழிவைக் கொடுக்கும் கொடிய விஷம். அதைத் தடுக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை மட்டுமல்ல அமைதியை விரும்பும் பொதுமக்களின் பொறுப்பும் கூட.

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் மற்றும் இந்நாட்டில் வாழும் சகல சமூக மக்க துவேஷத்தைத் ... நாட்டின் அமைதியைக் கெடுக்கக்கூடிய முறையில் செய்திகளையும் கருத்துக்களையும் வெளியிடாமல் பத்திரிகையாளர்களே தாமே 'தணிக்கை' செய்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூறினல் பயன் கிடைக்காமல் போகாது. இதையும் மீறி துவேஷத்தைக் கிளப்பிவிடும் பத்திரிகைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியது நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ள அரசாங்கத்தின் கடமை.

## ஏன் இந்தக் கொடூரம்?

இருபத்திமூன்று வயதான டாக்டர் பந்துல பெரேரா என்ற வைத்திய நிபுணர் கொழும்பில் வியாழக்கிழமை நள்ளிரவு கோரமாகக் குத்திக் கொலை செய்யப்பட்ட செய்தி எந்தக் கல்நெஞ்சத்தையும் கலங்கச் செய்யும்.

இந்தக் கொலைக்கான காரணம் எதுவும் இன்னமும் சரியாகத் தெரியவில்லை. டாக்டர் பெரேராவுடன் காரில் சென்றுகொண்டிருந்த இளம்பெண்ணின் சங்கிலியையும் கைக்கடிகாரத்தையும், காரை மறித்து டாக்டரின் உயிரைக் குடித்தவர்கள் பறித்து அறுத்திருக்கின்றனர். எனவே இந்தக் கொலைக்கு கொள்ளை தான் காரணமென்று கருத இடமுண்டு. ஆனல் அதே காரிலிருந்து சங்கிலி எடுக்கப்பட்டிருப்பதால் இக்கொலைக்கு வேறு நோக்கமிருக்கிறது என்று ஊகிக்கவும் இடமிருக்கிறது. இது பற்றி ஆராய்ந்து கொலைசாரர்களைக் கண்டுபிடித்து அவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்தித் தண்டனை பெற்றுக் கொடுக்கவேண்டியது பொலிசாரின் கடமை.

இலங்கையின் தலைநகரில் இந்தக் கோரக்கொலை நடைபெற்றிருக்கிறது. வழிப்பறி, கொள்ளை, கொலை ஆகிய குற்றச் சம்பவங்கள் நமது நாட்டில் அதிகரித்து வருவது பற்றி பலரும் கவலை தெரிவித்து வந்திருக்கின்றனர். இவற்றைத் தடுப்பது எப்படியென பலரும் பல யோசனைகளும் தெரிவித்தனர். கொலை, கொள்ளை போன்ற குற்றச்செயல்களை நவீன உத்திகளைக் கொண்டு எப்படி வெற்றிகரமாகச் செய்யலாம் என்பது பற்றிய செய்திகளையும் வெளிநாடுகளில் நடைபெறும்இதுபோன்ற சம்பவங்களையும் குற்றவாளிகள் எப்படித் தப்பிக்கொள்கிருர்கள் என்பதையும் தேடிப்பிடித்துப் பக்கம் பக்கமாக சகல விபரங்களுடனும் நமது நாட்டில் சில பத்திரிகைகள் வெளியிடுகின்றன. இதேபோல குற்றச் செயல்களைச் செய்து வெற்றிகரமாகத் தப்பிவிடலாம் என்பதை எடுத்துக்காட்டும் திரைப்படங்களும் இங்கு தடையின்றி திரையிடப்படுகின்றன.

பத்திரிகைகள் திரைப்படங்கள் இங்கு கொலை கொள்ளை மற்றும் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக இருக்கிற தென்பதை மறுப்பதற்கில்லை. அன்பையும் கருணையையும்தான் சகல மதங்களும் போதிக்கின்றன.

இலங்கை பௌத்த நாடு என்றும் பௌத்தத்துக்கே முதலிடம் அளிக்கப்பட வேண்டுமென்றும் கூறுகிருர்கள். அதில் தவறில்லை. ஆனல் புத்தபிரானின் அன்பு கருணை போதனைகளை சரியான முறையில் மக்களுக்கு எடுத்துக்காட்டி பகைமையையும் வெறுப்பையும் இல்லாமல் செய்வதில் ஈட்டும் வெற்றியில் தான் பௌத்தமும் மற்றும் மதங்களும் மக்களால் பின்பற்றப்படுவது தங்கியிருக்கிறது.

இது புனிதமான விசாக வாரம். இப்புனித வாரத்தில் அல்லது புனிததினத்தில் மட்டும் சமயபோதனை செய்தால் போதாது. பொதுமக்களின் வாழ்வில் அன்ருடம் திருப்பமேற்படுத்த சமயத் தலைவர்கள் முன்வரவேண்டும்.

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# செய்திகள்

நமது நிருபர்

## "நீர்வழங்குக"

மூதூர் இரட்டைத் தொகுதியின் 1-வது அங்கத்தவரான திரு. முகமதலி காணிநீர்ப்பாசன மின்சார மந்திரி திரு. சி. பி. டி. சில்வாவிற்கு அனுப்பிய கோரிக்கையில் கந்தளாய்த் திட்டத்தின் கீழ் குடியிருக்கும் குடியிருப்பு வாசிகளுக்கும் தம்பலகாமத்தைச் சேர்ந்த புராண காணிச் சொந்தக்காரர்களுக்கும் நீர் வழங்கும்படி கேட்டுள்ளார்.

0 0 0

## இன்னும் திருத்தவில்லை

புயற் காற்றினல் பாதிக்கப்பட்ட கிளிவெட்டி அரசாங்க நெற்குதம் இன்னும் திருத்தப்படாததால் நெல் சேமிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. பெருந்தொகையான பணச் செலவில் நிறுவப்பட்ட இக்கட்டிடத்தின் கூரை திருத்தப்படாமலுள்ளது.

0 0 0

## தொலைபேசி சீர்கேடு

மூதூர்ப் பகுதியிலுள்ள தபால்நிலையத்திலிருந்து வெளியூர்களுக்கு விரைவில் தொலைபேசித் தொடர்பு கொள்ளமுடியாமல் இருப்பதாகப் புகார்செய்யப்பட்டுள்ளது. தொடர்பை ஏற்படுத்தித் தருவதில் பலமணி நேரம் செல்வதாகப் பாவனையாளர்கள் புகார்செய்துள்ளனர்.

0 0 0

## கிராம சபை உத்தரவு

வைத்திய பரிசோதனையின்றி இறைச்சிக்காக ஆடு, மாடுகள் அழிக்கப்படுவதை உடனே நிறுத்தும்படியும் இவ்வுத்தரவு மீறப்படும் பட்சத்தில் சட்டரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் கிளிவெட்டி கிராம சபை அதன் எல்லையுளடங்கிய இறைச்சிக் கடைக்காரர்களை எச்சரித்துள்ளது.

0 0 0

## ச. ச. நிலைய உத்தியோகஸ்தர்

தம்பலகாமம் கோயில் குடியிருப்பு சன சமூக நிலையத்தின் புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவு வருமாறு:-

தலைவர்: செல்வன் சி. கோணேஸ்வரதாசன், செயலாளர்: செல்வன் அ. கோணேஸ்வரன், பொருளாளர்: செல்வன் சொ. நாகரத்தினம்.

# சவச்சாலையில் கிடந்தது

## மாஜிஸ்டிரேட் விசாரணை நடத்தினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மரணவிசாரணை அதிகாரிகள் இருவரும் லீவில் கொழும்பு சென்றதால், மரணமான ஒருவரது சடலம் சுமார் 20 மணி நேரம் சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்த சம்பவம் ஒன்று யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

நான்கு நாட்களுக்கு முன்னர் மரத்தால் விழுந்து அறிவிழந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, நேற்று முன்தினம் நண்பகல் 1. 30 மணிக்கு ஆஸ்பத்திரி வார்ட்டில் மரணமான கொழும்புத்துறையைச் சேர்ந்த கணபதி சின்னத்தம்பி (50 வயது) என்பவரது சடலமே நேற்றுக் காலை 9. 45 மணி வரை மரண விசாரணையின் பின் சவச்சாலையில் வைககப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணப் பகுதி மரணவிசாரணை அதிகாரிகள் இருவரும் கொழும்பு சென்றிருப்பதால் மரண விசாரணை அதிகாரி இல்லையென்று கூறி குறிப்பிட்ட சடலம் 20 மணி நேரமாக சவச் சாலையில் வைக்கப்பட்டிருப்பதாக நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் கூடிய போது வழக்கறிஞர்களான திருவாளர்கள் அல்பிரட் துரையப்பாவும், வி. நடராஜாவும் மாஜிஸ்டிரேட் ஜனப் ஜமிலிடம் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து சடலத்தைப் பார்வையிட்ட மாஜிஸ்டிரேட் ஜமில் தானே மரண விசாரணையையும் நடத்தினர்.

மரணமானவரைப் பரிசோதனை செய்த டாக்டர், இறந்தவரது உறவினர்கள் ஆகியோரும் சாட்சியமளித்தபின்னர் மரத்திலிருந்து வீழ்ந்ததால் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (கா. நி)

## தேயிலை தோட்டங்களில் மாற்றுப்பயிர்

கொழும்பு, சனி

இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் மூன்றில் ஒரு பகுதி மாற்றுப் பயிர் செய்கைக்குப் பயன்படுத்தப்படலாம். தேயிலைத் தோட்டப் பகுதிகளில் பயிரிடத்தக்க மாற்றுப்பயிர்களைத் தெரிந்து ஒரு பட்டியல் தயாரிப்பதற்கு விவசாய இலாகாவுக்கு உதவுமாறு அபிவிருத்தி ஆலோசனைக் குழுவிற்கு பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா உத்தரவிட்டுள்ளார். இத்தெரிந்தெடுக்கப்பட்ட பயிர்களைப் பயிரிடுவதால் பெறத்தக்க இலாபத்தையும் இவற்றைப் பயிரிடத் தேவையான தொழில்நுட்ப அறிவுபற்றியும் தெரிவிக்குமாறு பிரதமர் பிரஸ்தாபகுழுவுக்கு தெரிவித்துள்ளார்.

தேயிலை ஆணைக்குழுவின் சிபார்சைத் தொடர்ந்தே தேயிலைத் தோட்டங்களின் மூன்றில் ஒரு பகுதியில் மாற்றுப் பயிர் பயிரிட அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. அநேகமாக இம் மாற்றுப்பயிர்கள் அரசாங்கத்தினல் அங்கீகரிக்கப்பட்ட பயிர்களாகவே இருக்கலாம் என நம்பப்படுகிறது.

# வேலித் தகராறில் கத்திக்குத்து

குரும்பசிட்டி, சனி

வேலித் தகராறு சம்பந்தமாக எழுந்த சண்டையில் தலையில் கத்தியால் குத்தப்பட்டு படுகாயமடைந்த தொல்புரம் வாசியான பொன்னு சின்னத்துரை என்பவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காயமடைந்தவரை அண்ணன் கட்டிப்பிடிக்க தம்பி கத்தியால் குத்தியதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சங்கானைப் பொலிசார் நடத்திய விசாரணையை அடுத்து எஸ். தம்பிஐயா எஸ் தெய்வேந்திரம் ஆகிய இரு சகோதரர்கள் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிபதி திரு எம். சண்முகலிங்கம் முன்னிலையில் வெள்ளிக்கிழமை ஆஜர் செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் இருவரையும் தலா 300 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி அடுத்த மாதம் 9-ம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகஉத்தரவிட்டார். சந்தேகநபர்கள்சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர்.

## இளம் பெண்ணைக் கடத்தினராம்

### நால்வர் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

இளம்பெண்ணெருவரைக் கடத்திச்சென்ற தென்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட நால்வர் தலா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வழக்கில் மண்கும்பானைச் சேர்ந்த் முத்துச்சாமி நாகேஸ்வரி என்ற (17 வயது) இளம்பெண்ணைக் கடத்திச் சென்ற தென்ற சந்தேகத்திலேயே சந்தேக நபர்கள் நால்வரையும்ஊர்காவற்றுறைப் பொலிசார் கைது செய்திருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட பாலசிங்கம், பேரம்பலம், பொன்னுத்துரை, தவநாயகம் ஆகிய நால்வரையும் தலா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் ஜனப் ஜமீல் சந்தேக நபர்களை அடுத்த மாதம் 5-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

முதல் இரு எதிரிகள் சார்பில் புரக்டர் ஆர். விசுவநாதனும், 3-ம்,4-ம் எதிரிகள் சார்பில் புரக்டர் ரி. யோகநாதனும் ஆஜரானுர்கள். (கா. நி.)

......

## மறைந்த நீதிபதிக்கு அனுதாபம்

குரும்பசிட்டி, சனி

மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னர் நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. ஜி. ஸி. நைல்ஸ் திடீர் மரணம் எய்தியமையை யடுத்து வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் வழக்கறிஞர் திரு. ஜி. வி. பாலசிங்கம்ஆகியோர் மறைந்த நீதிபதியின் குணநலன்கள்பற்றி உரையாற்றினர். அனுதாபத் தீர்மானம் திரு. நைல்ஸ் குடும்பத்தினருக்கு அனுப்பிவைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# செய்திச் சுருக்கம்

## விஞ்ஞான விரிவுரையாளர் தட்டுப்பாடு

தேசிய உயர்கல்வி சபைக்குப் பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானப்பிரிவுக்கு தகுதிவாய்ந்த விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோரை நியமிப்பதில் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. இப்பதவிகளுக்கு இலங்கையில் தகுதிவாய்ந்தவர்கள் கிடைக்காவிடின் தகுதி உடையவர்களை வெளிநாடுகளிலிருந்து தருவிக்க வேண்டியிருக்குமென சபையின் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா கூறியுள்ளார்.

## மாவோ ஜுரம்

கொழும்பில் இப்பொழுது 'மாவோ 'சளிஜுரம்' மிகவும் தீவிரமாக பரவி வருகிறதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பெரியவர்களையும் சிறுவர்களையும் பீடித்துள்ள இந்த ஜுரம் வெசாக் விழாவை கண்டுகளிக்க இவ்வார முடிவில் கொழும்புக்கு வந்து குவியும் மக்கள் கூட்டத்தையும் பாதித்து மேலும் நாடு பூராவும் பரவலாம் எனச் சுகாதாரப் பகுதியினர் அஞ்சுகின்றனர்.

## வாழ்க்கைச்செலவைக் குறைக்க நடவடிக்கை

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக உள்நாட்டு உற்பத்திப் பொருள்களினது விலையைக் குறைக்கவேண்டுமென உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இவ்வுற்பத்தியாளர்கள் இதற்கு உடன்படாவிடில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனத் தெரிகிறது. விலைகள் சம்பந்தமாக மந்திரிசபையின் உபகுழு கூடி எடுக்கப்பட்ட முடிவில் விலைகளைக் குறைக்காத உள்ளூர் உற்பத்தியாளர்களின் லைசென்சுகளை ரத்துச்செய்வதோடு இறக்குமதிக்கோட்டாக்களையும் கட்டுப்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

## மண்சரிவு

மலைநாட்டில் ஏற்பட்ட கடும்மழை காரணமாக பல இடங்களில் சிறுசிறு மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இதனல் பிரயாணிகள் கஷ்டமடைகிருர்கள். வாகனப் போக்குவரத்துகள் சிறிது தடைப்பட்டுள்ளன. இது மட்டுமன்றி மண்சரிவுகள் ஏற்பட்டுள்ள இடங்களில் உள்ள சிற்ருறுகள் யாவும் பெருக்கெடுத்துள்ளன.

## கடன் வழங்க நிதி தருக

வீடுகள் கட்டுவதற்கு கடனுதவி கோரியவர்களுக்கு வழங்குவதற்கென ஒரு கோடியே எண்பது லட்சம் ரூபாவை மேலதிகமாகத் தருமாறு தேசிய வீடமைப்பு இலாகா மந்திரிசபையைக் கேட்டுள்ளது. தற்போது வீடமைப்பு இலாகா 4000 கடன் விண்ணப்பக்காரர்களுக்கு பணம் வழங்க வேண்டியுள்ளதாலேயே மேற்கூறப்பட்ட தொகையை வழங்குமாறு மந்திரி சபையைக் கேட்டுள்ளது. 1967.ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குப் பின்னர் வீடு கட்ட கடன் கோரியவர்களுக்கு எந்தவித கடனுதவியும் கொடுக்கப்படவில்லையென பிரஸ்தாப இலாகா அறிவித்துள்ளது.

## புதிய பாதை

பண்டத்தரிப்பு, வெள்ளி

இளவாலை புனித நீற்ரு ஆலயத்துக்கும் அதன் சுற்றுடலில் வசிக்கும் மக்களுக்கும் இளவாலை பிரதானவீதி நாவலடிச் சந்தியிலிருந்து புதிய பாதை ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது, இது "நீற்ரு மாதா" ஒழுங்கை என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

## மணிக் கோபுரம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இளவாலை செ்ன். ஜேம்ஸ் ஆலயத்துக்கான புதிய மணிக் கோபுரத்தில் மணியை கட்டளைக் குரவர் வண டெய்சி சுவாமியார் ஏற்றி வைத்தார்.

## திருமணம்

திருநிறைசெல்வன் ஏ. கே. ஏனுதிநாதன் (மாநகரசபை குருணுகல்) அவர்களுக்கும், திருநிறைசெல்வி ஏ. பூரணம் அவர்களுக்கும் இம் மாதம் 30-ந் திகதி சின்னுலடி, காரைநகர் (மணமகள் இல்லத்தில்) காலை 8 9 மணிக்கிடையில் வரும் சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

க. க. சுப்பிரமணியம்.

976

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org